112766

புள்ளிருக்கு வேளூர்த்
தல வரலாறு

DIGITIZED

ஓ23:38·21193p
N60
112766

வெளியீடு எண் 62.

உ
சிவமயம்

# புள்ளிருக்குவேளூர்த் தல வரலாறு

[ திருப்பாடல்களுடன் ]

இது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
25ஆவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுள்ளப்பாங்கின்படி

வேளூர், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில்

கட்டளைவிசாரணை,


ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகளால்

வெளியிடப்பெற்றது.

1960 [விலை 35 ந. பை.

111
Q23:38.2 1193 P
N60

முதல் பதிப்பு 1943.
இரண்டாம் பதிப்பு 1949.
மூன்ரும் பதிப்பு 1955.
நான்காம் பதிப்பு 1959.
ஐந்தாம் பதிப்பு 1960.




ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.


உ
சிவமயம்

# பொருளடக்கம்


| தொடர் எண் | | | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | தலமும் இருப்பிடமும் | ... | 1 |
| 2. | தலப் பெயர்கள் | ... | ,, |
| 3. | கோயிலமைப்பு | ... | 2 |
| 4. | மூர்த்திகள் | ... | 5 |
| 5. | தலப்பெருமை | ... | ,, |
| 6. | தீர்த்தங்கள் | ... | 7 |
| 7. | தலவிருட்சம் | ... | 11 |
| 8. | வழிபட்டோர்கள் | ... | ,, |
| 9. | சுற்றுக்கோயில்கள் | ... | ,, |
| 10. | மண்டபங்கள் | ... | 12 |
| 11. | சிற்பங்கள் | ... | ,, |
| 12. | நித்திய பூஜைகளும் திருவிழாக்களும் | ... | 13 |
| 13. | கல்வெட்டுக்கள் | ... | 14 |
| 14. | அன்பர்கள் | ... | 20 |
| 15. | சமயப்பணி | ... | 23 |
| 16. | திருப்பணி | ... | 24 |
| 17. | சொத்துக்கள் | ... | 30 |
| 18. | நிர்வாகம் | ... | 36 |
| 19. | புராணங்களும் பாடல்களும் | ... | ,, |
| 20. | தேவாரப் பாடல்கள் முதலியன | ... | 37 |

வேளூர்த் தோற்றம்



தங்கக் கொடிமரமும் பிரதான இராசகோபுரமும்



சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# புள்ளிருக்குவேளூர்த் தல வரலாறு

## 1. தலமும் இருப்பிடமும்

"தன்னை அடைந்தார்க்கு இன்பங்கள் தருவானாகிய இறைவன் தீராநோய் தீர்த்தருளும் பொருட்டு மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி, ஸ்ரீ வைத்தியநாதர் என்னும் திருப்பெயருடன் திருமேனி தாங்கி எழுந்தருளியிருக்கும் தலம் திருப்புள்ளிருக்குவேளூர் என்பதாகும். இது சோணாட்டில் தஞ்சை ஜில்லா சீகாழி தாலூகாவில் காவிரி யின் வடபால் உள்ளது. தென்னிந்திய இருப்புப்பாதையில் வைத்தீசுவரன்கோயில் என்னும் பெயருடன் ஒரு புகை வண்டி நிலையமாகவும் அமைந்துள்ளது. தல யாத்திரை செய்வோர் தங்குவதற்கு வசதியாகப் பல சத்திரங்களும் மடங்களும் இருக்கின்றன.

## 2. தலப் பெயர்கள்

புள் (ஜடாயு), இருக்கு (இருக்குவேதம்), வேள் (முருகன்), ஊர் (சூரியன்) என்ற நால்வரும் பூசித்தமை யால் புள்ளிருக்குவேளூர் எனவும், சடாயு பூசித்தமையால் சடாயுபுரி எனவும், வேதம் பூசித்தமையால் வேதபுரி எனவும், கந்தன் பூசித்தமையால் கந்தபுரி எனவும், சூரியன் பூசித்தமையால் பரிதிபுரி எனவும், அங்காரகன்

பூசித்தமையால் அங்காரகபுரம் எனவும், அம்பிகை பூசித்தமையால் அம்பிகாபுரம் எனவும் பல பெயர்கள் உள்ளன. இவையன்றி வினைதீர்த்தான்கோயில், தையல்நாயகி கோயில், வைத்தீசுவரன்கோயில் முதலான பற்பல பெயர்களும் இத்தலத்திற்கு வழங்குகின்றன.

## 3. கோயிலமைப்பு

ஆலயம் நகரின் நடுவே நாற்புறமும் உயர்ந்த சுற்று மதில்களால் சூழப்பட்டு மிக அழகாக விளங்குகிறது. கீழ்ப்புறமும் மேற்புறமும் முன்பக்கம் இராஜகோபுரமும் பின்பக்கம் கட்டகோபுரமும் விளங்குகின்றன. தென்புறம் சாதாரண வாயில் ஒன்று இருக்கின்றது. ஆலயத்திற்குள் இரண்டு பெரிய சுற்றுலேகளும், திருமதிலின் வெளிப்புறம் மடவிளாகமும் அமைந்திருக்கின்றன. அம்மையாரையும் இறைவனையும் வலம் வருதற்குத் தனித்தனி சுற்றுலேகள் இருக்கின்றன. ஸ்ரீ வைத்தியநாத சுவாமி சந்நிதானம் மேற்குநோக்கியும், தையல்நாயகி அம்மையாரின் சந்நிதானம் தெற்குநோக்கியும் உள்ளன.

ஆலயத்தின் கீழ்த்திசையில் பைரவக்கடவுளும், மேற்றிசையில் வீரபத்திரக்கடவுளும், தென்றிசையில் கற்பக விநாயகரும், வடதிசையில் காளியும் அமர்ந்து காவல் புரிகின்றனர். இதனை,

" தெற்கிற் கணேசன் திகழ்மேற்கிற் பைரவனுந்
தோக்க வடக்கிற் சுடர்காளி—மிக்ககிழக்
குள்ளிருக்கும் வீரனையும் உற்றுப்பணிந் துய்ந்தோம்
புள்ளிருக்கு வேளூசிற் போய் "

என்னும் தனிப்பாடற் செய்யுளால் உணரலாகும்.



மேலக் கோபுரவாயிலின் வழியாக ஆலயத்தினுட் சென்றால் வெள்ளியாலும் தங்கத்தாலும் இரு துவஜஸ்தம்பங்கள் உள்ளன. மேற்கு வெளிப்பிராகாரத்தின் கீழ்புறம் குமரகுருபரர் என வேளூர்ப் புராண ஆசிரியரால் போற்றப் பெற்ற அறுமுகக்குமாரர் கர்ப்பக்கிரகம் அமைந்துள்ளது. தென்புறம் தற்போது சந்தனக்குழம்பு மண்டபம் என வழங்கும் ஆஸ்தான ( அலங்கார ) மண்டபம் அமைந்துளது. வடக்கு கிழக்குப் பிராகாரங்களில் திருமாளிகைப் பத்தி மண்டபங்கள் அமைந்துள்ளன. வடக்குப் பிரகாரத்தில் சுவாமிகோயிலை ஒட்டி ஆவுடையம்மன் என்னும் பத்ரகாளியம்மன்கோயில் உளது. கிழக்குத் திருமாளிகைப் பத்தியில் காரியாலயம் உள்ளது. இப் பிராகாரத்தில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரர் சந்நிதிக்கு ஒரு சிறு கட்டைக் கோபுரம் அமைந்துள்ளது. இக் கட்டைக் கோபுரத்தின் தென்புறம் ஜுரஹரேசுவரர்; நவக்கிரக மண்டபம், கிழக்கு முகமாகத் தண்டாயுதபாணி, தெற்குமுகமாக அங்காரகன் ஆகியோரது மூலவர் எழுந்தருளி உள்ளனர்.

கீழைப் பிராகாரத்தின் கீழ்பால் தலவிருக்ஷம் வேம்பு இருக்கும் வேம்படிமால் உளது. இதுதான் ஆதி வைத்திய நாதபுரி என வழங்கப்பெறுவது. அதற்குச் செல்லும் கட்டைக் கோபுரத்தை ஒட்டி ஆதிபுராணேசுவரர், வீரபத்திரர் திருவுருவங்கள் உள்ளன. மடைப்பள்ளியில் மேற்கு முகமாக அன்னபூரணி அம்மன் திருவுருவம் அமைந்துளது. தெற்குப் பிராகாரத்திற்குத் தெற்கில் அம்மன் சந்நிதியில் சித்தாமிர்த தீர்த்தம் இருக்கிறது. அத்தீர்த்தத்தில் நாற்புறமும் அழகிய திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் அமைந்திருக்கின்றன.

சுவாமி சந்நிதியிலுள்ள கோடிமரங்களின் வடபால் முதலில் பள்ளியறையும், அதற்கடுத்து சுக்கிரவார அம்மன் உத்ஸவரும், அதற்கடுத்து ஸ்ரீ தையனுயகியின் கோயிலும் அமையப்பெற்றிருக்கின்றன. சுவாமிசந்நிதிக்குச் செல்லும் முதல் வாயிற்படியில் இருபுறமுள்ள குடவறைகளில் வடக்கில் அதிகாரநந்தி உத்ஸவரும், தெற்கில் சடாயு உத்ஸவரும் எழுந்தருளி இருக்கின்றனர். உட்பிராகாரத்தில் சுவாமி சந்நிதிக்கு மேற்புறம் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி உத்ஸவர் வள்ளி தெய்வயானையோடும் எழுந்தருளியிருக்கின்ருர். அடுத்தாற்போல் கஜலட்சுமியும் அஷ்டலட்சுமியும் உள்ளனர். வடக்குப் பிராகாரத்தில் ஸ்ரீ நடராஜமூர்த்தி ஸ்ரீ சிவகாமி அம்மையோடும் எழுந்தருளியிருக்கின்ருர். இப் பிராகாரத்தில் சுவாமி கர்ப்பக்கிரகத்தில் வடக்கு முகமாக எழுந்தருளியுள்ள துர்க்கை அம்மன் மகிமை மிக்கவள். கீழைத்திருமாளிகைப்பத்தியில் சூரியன், அங்காரகன் நீங்கலாக நவக்கிரகங்கள் அமைந்துள்ளன. தெற்குப் பிராகாரத்தில் அறுபத்துமூவர் மூலவர்களும், சப்த கன்னிகைகளும் அமர்ந்துள்ளனர்.

இவையன்றி சடாயு குண்டம் என்ற ஒன்றும் (இராமர் சடாயுவைத் தகனம் செய்த இடம்) உளது. அக்குண்டத்தின்மேல் இராமன், இலக்குமணன், விசுவாமித்திரர், வசிட்டர், சடாயு முதலியோர் திருஉருவங்களும் உள்ளன. சட்டைநாதர் (சுதை) கட்டு மலையின்மேல் தென்முகமாக உள்ளார். அடியில் தென்முகக்கடவுளும், மேற்புறம் சட்டைநாதர் மூலவரும், கீழ்ப்புறம் சண்டிகேசுவரர் ஆகியோர் அமைந்துள்ளனர். சடாயு குண்டத்திற்கு அடுத்தாற்போல் உள்ள வாயிலைத் தாண்டிச் சென்றதும் எதிரில் கிழக்கு முகமாகச் சோமாஸ்கந்தர் (நாயகர்) சந்நிதி உள்ளது. தென்புறம் சிங்காரவேலவர், ஐயனர், பிடாரி,



மாரியம்மன், திரௌபதையம்மன், கங்காளர், கங்காவிஸர்ஜனர், பிக்ஷாடனர், பிரதோஷநாயகர், நால்வர், சண்டேசர், அங்காரகன் முதலிய உத்ஸவ மூர்த்திகள் வைக்கப்பெற்றிருக்கின்றன.

## 4. மூர்த்திகள்

இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருநாமம் ஸ்ரீ வைத்தியநாதர். அம்மையார் திருநாமம் ஸ்ரீ தையல்நாயகி. முருகப்பெருமான் திருநாமம் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரர். இப்பெருமானே "எவ்வாறு துதிப்பேன்" என்று மயங்கிய அருட்புலவராம் குமரகுருபர அடிகளுக்குப் "பொன்பூத்தகுடுமி" என அடியெடுத்துக் கொடுத்துப் பாடும்படி அருள் செய்தவர். மேலும் இத்தலத்தில் நவக்கிரகங்கள் வரிசையாக அமைக்கப்பெற்றிருக்கின்றன. கோள்வலியற்ற இடங்களிலேதான் இவ்விதம் நவக்கோள்களும் ஒரே வரிசையில் அமைக்கப்பெறுவது. இங்கு அங்காரகனுக்குப் பெருமை அதிகம். இது அங்காரக க்ஷேத்திரம்.

## 5. தலப்பெருமை

முருகன் சூரன் மார்பைப் பிளக்க வேல் வாங்கியது இத்தலத்திலே. தன்னிடத்து வசிக்கும் உயிர்கள் இயம லோகம் அடையப்பெருததும், பிடித்தபேய்கள் ஓடப் பெறுவதும், இறைவன் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளையும் தீர்க்கத் திருவுளங்கொண்டு தையல்நாயகியம்மையார் தைல பாத்திரமும், சஞ்சீவியும் வில்வமரத்து அடிமண்ணும் எடுத்துக்கொண்டு தம்முடன் வர வந்து வைத்தியராகி அருள் செய்திருக்கப்பெற்றதும்,

அறுசுவையோடு கூடிய உணவை அடியார்களுக்கு உண்பித்து மாகேசுரபூசை செய்யப்பெறுவதும், பிறந்தாலும் இறந்தாலும் போகமோட்சங்களைக் கொடுப்பதுமாகிய பெருமையினையுடையது இத்தலம்.

நேத்திரப்பிடி சந்தனம்:- ஸ்ரீ செல்வ முத்துக்குமாரருக்கு அர்த்தயாம பூஜையில் சாத்தப்படுவது. அணிபவர்களுக்கு வேண்டிய பயன்களைக் கொடுக்கவல்லது.

சடாயுகுண்டம் :- சடாயுவின் வேண்டுகோட்படி இராமபிரான் இத்தலத்தில் ( விபூதி குண்டத்தில் ) சிதையடுக்கிச் சடாயுவின் உடலை வைத்துத் தகனஞ் செய்ததனால் இப்பெயர் பெற்றது. சிவ புராணத்தைப் பராமுகமாகக் கேட்டதினால் வீரசேனனென்னும் அரசனுக்கு ஏற்படவேண்டிய கயரோக நோய் அவனைப்பற்றாது, அவன் புதல்வனாகிய சித்திரசேனனைப்பற்ற அவ்வரசன் குருவாணைப்படி இத்தலத்துவந்து நீராடி இறைவழிபாடு இயற்றி இக்குண்டத்திற்கு அதிரசம், வடை முதலியன நிவேதித்து, வேதிகையும் பொன்னால் செய்து முடித்து, குண்டத்திலுள்ள நீற்றை எடுத்துத் தானும் அணிந்து தன் புதல்வனுக்கும் அணிவிக்கப் புதல்வன் நோய் நீங்கப் பெற்றான். இன்றும் அக்குண்டத்திலுள்ள நீற்றினை இட்டுக்கொண்டு பலரும் பலவிதமான பிணிகளும் நீங்கப் பெறுகிறார்கள்.

திருச்சாந்துண்டை :- இது வைத்தியநாதரிடத்தில் நோய் நீங்கப்பெறுவான் வேண்டிப் பெறும் மாத்திரை. இதனைச்செய்து உண்ண விரும்புவோர் சுக்கிலபக்கத்தில் நன்னாழிகையில் அங்கசந்தான தீர்த்தத்தில் நீராடி, நடுவிலுள்ள மிருத்திகையை எடுத்து புதுப்பாத்திரத்தில்



வைத்துக்கொண்டு ஆலயத்திற்கு வந்து, விபூதி குண்டத்திலுள்ள விபூதியையும் சித்தாமிர்த தீர்த்த நீரையும் அதனுடன் கலந்து பஞ்சாக்கரம் செபித்துக்கொண்டே பிசைந்து, முத்துக்குமாரர் திருமுன்புள்ள குழியம்மியிலிட்டு அரைத்து, கடுகளவாக உருண்டைகள் செய்து, அம்மையார் திருவடியில் வைத்து அருச்சித்த பின்னர், முறைப்படி இறைவழிபாடியற்றி உருண்டையைச் சித்தாமிர்தத் தீர்த்தத்தோடு நியமமாகக் கலந்து உண்ணல் வேண்டும். அவ்வாறு உண்பவர்கள் தீராத வினைகளெல்லாம் தீர்ந்து முத்தியின்பத்தை யடைவர்.

"விண்மருந் துதிக்கும் மண்மருந் தருந்தியும்"

"வினைதீர்த்த பெருமான் பக்கல் மண்ணுண்டு"

"வந்தவந்த பேர்களுக்கு மண்மருந் தளிக்கிறீர்"

"ஒருண்டை மண்ணை யுண்டால் ஐயிரண்டு
பிறப்பு மவர்க்கொழிக்கலாமே"

"வாயிலே மண்போட்டு வாங்குவர்காண் அம்மானை"

என்பன இவ்வூர்க் கலம்பகச் செய்யுட் பகுதிகள்.

## 6. தீர்த்தங்கள்


இத்தலத்தில் பதினெட்டு தீர்த்தங்கள் உள்ளன.

1. சித்தாமிர்தத் தீர்த்தம் :- இதுவே எல்லாத் தீர்த்தங்களிலும் முதன்மையானது. அம்மையாரின் சந்நிதானத்தில் இருக்கின்றது. கிருதயுகத்தில் காமதேனு இத்தலத்துவந்து தனது முலைக்குடப்பாலால் இறைவரது


திருமுடியில் அபிஷேகிக்க அப் பால் பெருகிக் கலந்தமையால் கோக்ஷீர தீர்த்தம் என்றும், திரேதாயுகத்தில் சிவனடியா ரொருவருக்குக் கருப்பஞ்சாறுபோல இனித்ததால் இக்ஷுசார தீர்த்தம் என்றும், துவாபரயுகத்தில் சடாயு பலகால் மூழ்கி வழிபட்டமையால் சடாயு தீர்த்தம் என்றும் பெயர் வழங்கப்பட்டன. இக்கலியுகத்தில் சித்தர் கணம் இறைவர் திருமுடியில் தேவாமிர்தத்தால் அபிஷேகித்தபோது அவ்வமிர்தம் இதிற்கலந்தமையால் சித்தாமிர்தத் தீர்த்தம் என்று பெயர் வழங்கப்படுகிறது. சுந்தரனென்னும் அந்தணனொருவனுக்கு ஏற்பட்ட வெண்குட்டமும், அங்காரகனது செங்குட்டமும் நீங்கியது. பிராயச்சித்தத்தாலும் தீராத சிவத்துரோகம் செய்த தக்கனுக்கு உடலும் தலையும் ஒன்று சேரும்படி செய்தது.

சதானந்தர் என்னும் முனிவர் இதில் நீராடித் தியானம் செய்யுங்கால், பாம்பால் துரத்தப்பட்ட தவளை ஒன்று அவர்மீது பாய்ந்து அவரது தியானத்தைக் கலைத்தது. முனிவர் கோபித்து "இத்தீர்த்தத்தில் எக்காலமும் தவளைகளும் பாம்புகளும் இல்லாது ஒழியக் கடவன" என்று சாபமிட்டார். இன்றளவும் தவளை முதலியன இல்லாமல் இருப்பது காணத்தக்கது. இத்தீர்த்தத்தின் மகிமையைப் பற்றி "வற்ருச் சித்தாமிர்தத் தீர்த்தத்துறைக் குறுந்திவலையோன்றேயமையும்" எனக் குமரகுருபரரும் அருளியிருத்தல் காண்க.

மேலும் இதன் சுற்றிலும் கிழக்குமுதலாக எட்டுத் திக்குகளிலும் இந்திர தீர்த்தம், பத்திதீர்த்தம், சர்வதீர்த்தம், முத்திதீர்த்தம், பிறைகதீர்த்தம், மங்களதீர்த்தம், ஞானதீர்த்தம், துர்வாசதீர்த்தம் என்ற எட்டுத் தீர்த்தங்கள் விளங்குகின்றன. இவ்வெட்டும் தம்மிடத்து மூழ்குவோர்க்கு முறையே அட்டசித்திகளையும் கொடுக்க வல்லன.



சித்தாமிர்த தீர்த்தம்



கோதண்ட தீர்த்தம்



இவ்வேட்டிலும் அட்டவசுக்களும், எட்டு முனிவர்களும் நீராடிப் பல பேறுகளும் பெற்றிருக்கின்றனர். இவைகள் ஒவ்வொன்றுக்கும் அதிதேய்வங்களும், விருட்சங்களும் தனித்தனியே தலபுராணத்தில் விரிவாகக் கூறப் பட்டிருக்கின்றன.

2. கோதண்ட தீர்த்தம் :- தென்மேற்கு மூலையில் இருக்கிறது. இதற்கு அதிதேய்வம் இராமர். காவற் கடவுள் இலக்குமணர். விருட்சம் வன்னி. துசீலன் என்னும் சித்தன் இதன் கரையில் வசித்து வந்தமையால், சித்த தீர்த்த மென்று முன்னர்ப் பெயர்பெற்று விளங்கியது. மேற்கூறிய துசீலன் செய்த பாபத்தால் உண்டான குமர கண்டவலி என்னும் நோயை நீக்கியதும் இத்தீர்த்த மேயாம். இராமபிரான் சீதாபிராட்டியாரோடும், தம்பி இலக்குமணரோடும் வனவாசஞ் செய்யுங்கால் இத்தலத்தை யடைந்து இதில் நீராடி இறைவனை வழிபட்டுத் தன் குலத்துப் பிதுரர்களுக்கும், இராவணனால் சிறகரியப்பட்டு இறந்த சடாயுவுக்கும் தருப்பணம் செய்தமையால் இராம தீர்த்தம் எனப் பின்னர் பெயர்பெற்றது. பங்குனி உத்தரத் தில் ஸ்ரீ நடராஜப்பெருமான் இதில் தீர்த்தங்கொடுத் தருளுவர். பிரார்த்தனைக்காக முடி எடுக்க வருபவர்கள் முடி எடுத்தவுடன் இதில் நீராடி அதன் பின்னரே சித்தா மிர்தத் தீர்த்தத்திற்குச் செல்வார்கள்.

3, கௌதம தீர்த்தம் :- இது இராமதீர்த்தத்திற்கு அருகில் தென்கீழ்த்திசையில் விளங்குகிறது. இதற்கு அதி தேய்வம் வாயுபகவான். காவற்கடவுள் சந்திரன், விருட்சம் மாமரம். கௌதமரால் உண்டாக்கப்பட்டது.

**4. வில்வ தீர்த்தம்:-** ஆலயத்திற்கு வடக்கே விளங்குகிறது. இதற்கு அதிதேய்வம் இந்திரன். காவற் கடவுள் தண்டபாணி. விருட்சம் வில்வமரம். வில்வமரங்களால் சூழப்பெற்றமையால் இப்பெயர் பெற்றது. இதனை உண்டாக்கினோர் விசுவதேவர்கள்.

**5. முனிவர் தீர்த்தம்:-** கீழவீதிக்குக் கிழக்கேயுள்ளது. அதிதேய்வம் சந்திரசேகரர். காவற் கடவுள் கருடன். விருட்சம் ஆலமரம். காற்கியன் காசிபன் முதலிய முனிவர்கள் எழுவரும் நீராடித் தவம் செய்தமையால் இப்பெயர் பெற்றது. தக்கனின் தலையை அறுத்த வீரபத்திரர் இதில் நீராடித் தன்னைப் பற்றித் துன்புறுத்திய வீரகத்தியைப் போக்கி இறைவரை வணங்கிக் கீழைக் கோபுர வாயிலில் துவாரபாலகராய் விளங்குகின்றார்.

**6. அங்கசந்தான தீர்த்தம்:-** இது வடகீழ்த் திசையிலுள்ளது. அதிதேய்வம் வயித்தியநாதர். காவற் கடவுள் அஸ்திரதேவர். விருட்சம் விளா. தாரகனோடு போர்செய்து மூர்ச்சித்துக் கிடந்த தேவர்களைக் காக்க இறைவன் தன் சூலத்தால் தீர்த்தமுண்டாக்கித் தேவர்களது சிதைந்த அங்கத்தை அத்தீர்த்தநீரில் நனைத்துப் பொருந்தச் செய்தமையால் இப்பெயர் பெற்றது. சிவதன்மன் என்னும் பிராமணன் செய்துவந்த கொடிய பாவங்களால் பிரமராக்ஷசாய்ப் பிறந்து இத்தீர்த்த நீர் பட்டமாத்திரையே முன்னைய வடிவுபெற்றான்.

மற்றையன:- ஆதிகாவிரி தீர்த்தம், கபில தீர்த்தம், சூரிய தீர்த்தம், சூல தீர்த்தம், சேட தீர்த்தம், சோம தீர்த்தம், தக்க தீர்த்தம், பராசர தீர்த்தம், பீம தீர்த்தம்,

10A




ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி





துவாரசக்திகள்



வேம்படிமால் (தலவிருக்ஷம்)



மிருதசஞ்சீவன தீர்த்தம், வித்தியாதர தீர்த்தம் என்பவைகளாம். இத்தீர்த்தங்களில் முழ்கும் முறையும், நாளும் அதனால் உண்டாகும் பலனும் தலபுராணத்திற் கண்டு கோள்க.

## 7. தலவிருட்சம்

இத்தலம் கிரேதாயுகத்தில் கதம்பவனம் என்றும், திரேதாயுகத்தில் வில்வவனம் என்றும். துவாபரயுகத்தில் வகுளவனம் என்றும், கலியுகத்தில் நிம்பவனம் என்றும் பெயர்பெற்று விளங்குவதாகும், முதல் யுகத்திலுள்ள கடம்ப விருட்சமே மற்றைய மூன்று யுகத்திலும் முறையே வில்வம் முதலிய விருட்சங்களாகத் திரிந்தன என்றும் புராணங் கூறுகின்றது. இப்போழுது வேம்பு தலவிருட்சமாக உள்ளது. இது கீழக்கோபுரவாயிலின் உட்புறம் இருக்கிறது. இதனை மக்கள் வேம்படிமால் என வழங்குகின்றார்கள். இதனடியில் ஆதிவைத்தியநாதர் எழுந்தருளியிருக்கின்றார்.

## 8. வழிபட்டோர்கள்

சடாயு, வேதம். முருகன், ஆதித்தன், அங்காரகன், பிரமன், சதானந்தர், இராமர், கலைமகள், பூமகள், துர்க்கை, சிவசன்மன், துருவாசன், பராசரர் முதலியோர் வழிபட்டுப் பலபேறுகளைப் பெற்றுள்ளார்கள்.

## 9, சுற்றுக்கோயில்கள்

இத்தலத்தின் நான்கு தேருக்களிலும் விநாயகர் ஆலயங்கள் பல இருப்பதோடு தெருக்களின் புறம்பே

ஐயனுர், பிடாரி, மாரியம்மன் முதலிய சிறு தெய்வங் களுக்கும் ஆலயங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாலயங்க ளெல்லாம் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஆலய நிர்வாகத்திற் குட்பட்டனவே. மருவத்தூரிலுள்ள ஆலயமும் இத் தேவஸ்தான நிர்வாகத்துக்குட்பட்டது.


## 10. மண்டபங்கள்

ஆஸ்தான மண்டபம், அலங்கார மண்டபம், சித்திர மண்டபம், வசந்த மண்டபம், தீர்த்தவாரி மண்டபம், களஞ்சியமண்டபம் முதலிய பல மண்டபங்கள் இவ் வாலயத்திலுள்ளன. சுவாமி சந்நிதி தட்டம்சுற்றி மண்ட பமே தற்போது ஸ்ரீ சண்முகவிலாசப் பிரகாரசபா மண்டபம் என வழங்கப்படுகிறது. இம்மண்டபத்தில்தான் சோற் பொழிவுகள் நிகழ்த்தப்பெறுகின்றன. களஞ்சிய மண்ட பத்தில் தேவஸ்தான காரியாலயமும், நூல் நிலையமும் ஏற்படுத்தப்பெற்றிருக்கின்றன. இப்பொழுது அருளாட்சி செலுத்தும் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் அறுபத்துமுவர் கும்பாபிஷேகமும் சந்தாசாரியார் பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும் நடத்தப்பெற்றன.


## 11. சிற்பங்கள்

பழைய பல்லவச் சிற்பங்களும், யாளங்கள் நிறைந்த தூண்களும், திருவுருவங்களும் மிகுதியாக உள்ளன. அம்மன் கோயில் தட்டஞ்சுற்றி மண்டபத்தில் கீழ்ப் பக்கத்துத் தூண்களில் பிரதாபசிம்ம மகாராசா அவர்களின் படிவமும், பத்தாவது மகாசந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிகர் அவர்கள்திருவுருவமும்உள்ளன. மேற்குப்

12A



ஸ்ரீ சண்முக விலாச பிரகாரசபாமண்டபம்



ஆஸ்தான மண்டபம்



பக்கத்துத் தூண்களில் ஸ்ரீ மல்லர் ஸ்ரீ காடேராவ் அவர் களின் படிவமும் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் திருவுருவமும் இருக்கின்றன. சண்முக விலாசப் பிரசார மண்டபத்தில் நடராஜப்பெருமான் திருவுருவமும் சோமாஸ் கந்தர் சந்நிதியில் அம்மை திருவுருவமும் உள்ளன. இவற்றின் மேற்பக்கத்து அந்தந்தப் பெயர்கள் பொறிக்கப் பெற்றுள்ளன.

## 12. நித்திய பூஜைகளும் திருவிழாக்களும்

நாடோறும் காமிக ஆகம விதிப்படி ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. பிரமோற்சவம் பங்குனித் திங்களில் நடைபெறும். அதில் ஐந்தாந் திருநாளன்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரர் ஸ்ரீ வைத்தியநாதரைப் பூசித் துச் செண்டு பெறும் காட்சி மிகச் சிறப்பானது. பிரமோற்ச வத்தில் கங்காவிசர்ஜனருக்கும் உற்சவமுண்டு. ஸ்ரீசெல்வ முத்துக்குமார சுவாமிக்குத் தைத்திங்களில் திருவிழா நடைபெறுகிறது. கடைசிச் செவ்வாயன்று தீர்த்தவாரி நிகழ்த்திப்படும். செவ்வாய்க் கிழமைகளிலும் மக்கள் கூட்டமாக வந்து சித்தாமிர்த தீர்த்தத்தில் முழ்கி, சுவாமி தரிசனம் செய்து போவார்கள். உற்சவ காலங்களில் சுவாமி எழுந்தருளும்போது கயிலையில் சோமாஸ்கந்தர் எழுந்தருளி யிருப்பதே போன்று நடுவில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரர் எழுந்தருளிவர, சுவாமி ஓர் புறமும் அம்மையார் மற்ரெருபுறமும் எழுந்தருளுவர்.

திங்கள்தோறும் வரும் கார்த்திகைத் திருநாட்கள், கந்தர்சஷ்டி போன்ற விசேட நாட்களில்தான் ஸ்ரீசெல்வ முத்துக்குமாரருக்கு அபிடேகம் நடைபெறும். மற்றைய

நாட்களில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரரின் ஆத்மார்த்த பூஜா மூர்த்தியான ஸ்ரீ முத்துலிங்கத்திற்குத்தான் அபிடேகம் நடைபெறும். ஏனைய தலங்கள் போலாது, அர்த்தயாம பூசாகாலத்தில் முதலில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரருக்கு வழிபாடு நடந்த பின்னரேதான் சுவாமிக்கு நடைபெறும்' இதற்குத்தான் புழுகாப்பு என்று பெயர். இப்புழுகாப்பு தரிசனந்தான் இத் தலந்திற்குச் சிறப்பு மிக்கது.

அங்காரக க்ஷேத்திரமானதால் செவ்வாய்க்கிழமை தோறும் மாலையில் ஆட்டுக்கடாவாகனத்தில் அங்காரகன் எழுந்தருளிப் பிராகாரத்தில்வலம் வருவார். இவையன்றியும் அம்மையாருக்கு ஆடிப்பூரம் நவராத்திரி உற்சவங்களும், பிறவும் நடைபெற்றுவருகின்றன.

## 13. கல்வெட்டுக்கள்

இவ்வளவு சிறந்த இத்தேவாலயத்தில் போதிய கல்வெட்டுக் குறிப்புக்கள் இல்லை. மக்கள் தம் அன்புமேலீட்டால் அவ்வப்போது திருப்பணி செய்து வந்திருக்கிறார்கள். அதனாலேயே சில கல்வெட்டுக்கள் இடம் மாறியும், புதையுண்டும், பொடியுண்டும் போயினபோலும். இருக்கின்ற சில கல்லெழுத்துக்களும் மிகப் பிற்காலத்தன. மகாமண்டபத்து வடபக்கத்தின் உட்புறச் சுவரில் ஆங்காங்குச் சிறிது சிறிதாகக் காணப்பெறும் தொடர்ச்சியற்ற எழுத்துக்களின் குறிப்பால் கி. பி. 1120 முதல் 1136 வரை ஆண்ட விக்கிரமசோழன் காலத்தனவாக இருக்கலாம் என்று எண்ணப்பெறும். முதலிரண்டு பகுதிகளிற் காண்பன மெய்கீர்த்திப் பகுதிகள். இதனால் இவை போலப் பழைய கல்வேட்டுக்கள் இருந்திருக்கவேண்டும் என்று ஊகிக்கலாம்.



அரசாங்கத்தால் படியெடுக்கப்பெற்றவையும், பெருதனவுமான கல்வெட்டுக்கள் எட்டு. அவற்றில் தஞ்சை மன்னனாகிய அச்சுதப்பநாயக்கன் காலத்தது ஒன்றும் துளஸா மன்னனுடையன இரண்டும் விக்கிரமசோழனது ஒன்றும். ஸ்ரீ சக்கோலோதேவ மகாராசாவினது ஒன்றும், பெயரும் காலமுந் தெரியாதன மூன்றும் ஆக எட்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டது வீரபாண்டியனுடையதே.

விக்கிரமசோழன் :— இவன் முதற்குலோத்துங்கன் மகன். இவன் இக்கோயிலுக்குச் செய்த பணி பெரிதாக ஒன்றும் இதனால் விளங்கவில்லையாயினும், இவனைப் பற்றின புகழாக 'திருவடி இரண்டும் தன் முடியாகத் தென்னவர்சூட, மூன்றும் மனுவாறு பெருக, கலியாறு வறப்ப செங்கோல் திசைதோறும் செல்ல, வெண்குடை இங்கிலவளாகம் எங்கணும் தங்க வெண்ணிலாத் திகழ, ஒரு தனி மேருவில் புலியிற் பொன்னேமிவளவும் தன்னேமி நடப்ப, விளங்கு ஜயமகளை இளங்கோப்பருவத்து சக்கரக் கோட்டத்து வீரத்தொழிலால் வதுமணந்தான்' என்று கூறப்பெற்றுள்ளது. இவன் காலம் கி. பி. 1117 ஆகும்.

வீரராசேந்திரபாண்டியன் :— பாண்டியர்களில் இப் பெயர் கொண்டார் யார்? எக்காலத்திருந்தார்? என்பன அறியக்கூடவில்லை. இக்கல்வெட்டு திருவம்பலமுடையானான தொண்டைமானால் திருப்புள்ளிருக்குவேளூர் நாயனாருக்கு இறையிலி விடப்பெற்றுள்ளது என்பதனை அறிவிக்கிறது.

அச்சுதப்பநாயக்கர் :— இவருக்குப் புண்ணியமாக அழகப்பெருமான் பிள்ளை என்பவர் சுவாமி சிதம்பரீசர்க்கு

மகாசிவராத்திரி அபிஷேகத்திற்கு ஈடாக மண்ணிப்பள்ளம் என்ற கிராமத்தில் நிலம் விட்டு இறையிலி செய்தார். (423 of 1918).

துளஸாமகாராசா :— இவர் சகம் 1689-ல் தஞ்சையையாளுகின்ற காலத்தில் சீகாழிச் சீமையை அரசப் பிரதிநிதியா யிருந்து ஆண்டவர் ஸ்ரீ மல்லர் ஸ்ரீ காடேராவ் அவர்கள். அப்போது தருமபுரத்தில் பத்தாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள். வேளூர்க் கட்டளை விசாரணையி லிருந்தவர் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள். அப்போது வேளூர் இரண்டாம் பிராகாரத்து சுற்றுப்புறத்து மதிலும், திருமாளிகைப்பத்தி மண்டபங்களும், அம்மன் சந்நிதி தட்டஞ்சுற்றி மண்டபமும், திருமாளிகைப் பத்தியின்மேல் வேளவால் நத்தி மண்டபமும் கட்டி நிறைவேற்றப்பெற்றன. (421 of 1918) அடுத்த கல்வெட்டு சகம் 1692-ல் கி. பி. 1770-ல் சித்தாமிர்தத் தீர்த்தக்கரை நான்கு பக்கங்களும் நீராழிமண்டபம் திருப்பணி செய்யப்பெற்றதை அறிவிக்கின்றது.

பெயர் குறியாத கல்வெட்டு :— வேளூர் தேவஸ்தானம் கிராமங்கட்குப் பாய்ச்சல்காலாக இருப்பது முடவனுறு. இந்த ஆறு பழவாற்றில் ஆதமங்கலத்திற்கு அருகாமையில் பிரிகிறது. இதிலிருந்து புங்கனூர் சமீபத்தில் - சட்டைநாதபுரம் வாய்க்கால் பிரிகிறது. இந்த வாய்க்கால் கண்வாய்க்கு நீளம் முப்பத்தைந்து அங்குலமும், அகலம் எட்டங்குலமுமாக வைத்துக் கட்டினார்கள் என்பதை அறிவிக்கிறது. இன்னும் பேரிதாகக் கண்வாய் வைத்துவிட்டால் தேவஸ்தான நிலங்களின் பாய்ச்சல் கெடும். ஆதலால் இக்கல்வெட்டை மாற்றவும் புதுக்கவும் முடியாதபடி கலியுகத்துக் கண்கண்ட தெய்வமாகிய ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி கருப்பக்கிருக நிலைப்படியில் சேதுக்கிவைத்தனர். இங்கு அங்குலம் என்பது தச்சுமுழ அளவைப்படியுள்ள அங்குலம். (419 of 1918)



கிராம அளவை செய்தபோது ஒரேயளவுள்ள கோலைப் பயன்படுத்தாமையால் இன்ன கிராமம் இத்தனையடியுள்ள கோலால் அளக்கப்பெற்றது என்பதனை அறிவிக்கின்றது இக்கல்வெட்டு.

| | | |
|---|---|---|
| தோட்டமானியம் அளந்தகோல் | 18 | அடி நீளம் |
| மருத்தூர் அளந்தகோல் | 16 | ,, |
| கோண்டத்தூர் அளந்தகோல் | 15 | ,, |
| மாகாணம் கிராமம் அளந்தகோல் | 14 | ,, |

சக்கோஜீதேவமகாராசா :— இவன் ஆரியவசவ கங்கணமறியாத மணவாளன் தந்தருளிய சக்கோஜீ எனப்படுவதால் இவன் மணவாளன் மகனாக இருக்கலாம். இவ்வரசன் இவ்வூருக்கு ஆறு ஆணைகளை விட்டான்.

கல்வெட்டுக்கள்: கோடிமரத்தின் பீடத்திலுள்ளது:-

சகம் 1802 ல் கி. பி. 1880 ல் தருமபுரஆதீனம் பதினொருவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருள்பெற்ற, ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அநுக்கிரகம் பெற்ற ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் கட்டளை விசாரணை செய்கின்ற

போது சுவாமி அம்மன் துவஜஸ்தம்பங்கள் செப்பனிடப் பெற்று, குறடு கட்டி தங்கம், வெள்ளி பூசப்பெற்றன.

தீர்த்தவாரி மண்டபத்தின் வடபுறம், மேற்சுவரில் காணப்படுவது :-

ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1814 க்குச் சரியான கர வருஷ ஆனி மீ 14உ தருமபுர ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசமபந்த பரமாசாரிய சுவாமிகள் அருள்பெற்ற கட்டளை விசாரணை ஸ்ரீமத் வைத்தியலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அதிகாரகாலத்தில் நாட்டுக்கோட்டை நகரத்தாரவர்கள் உதவியினால் கானாடு காத்தான் கரு. தூ. தூங்கப்பச் செட்டியார் அவர்கள் குமாரர்களால் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி கோபுரங்கள் உள்படத் திருப்பணிசெய்து தீர்த்தவாரி மண்டபமும், அம்மன் சந்நிதி மண்டபமும், நூதனமாகக் கட்டிமுடித்து மேற்படி தேதியில் மகாகும்பாபிஷேகமும் நிறைவேறின. ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி வெள்ளி ரதமும் செய்துவைக்கப் பெற்றது. வைத்தியநாதர் துணை.

தீர்த்தத்தின் வடகரையில் கிழக்கு மேற்கு பக்கங்களில் உள்ளவை :—

கிழக்கில் :- ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1689 கலியுக வருஷம் 4868 இதன் மேற்செல்லாநின்ற சர்வசித்து வருஷம் ஆவணி மாதம் 10-க் தேதி போஸலே வங்கிசத்தார்களான ஸ்ரீ துளசாமகாராசசாயபு அவர்கள் ராச்சியபரிபாலனம் பண்ணுகிற நாளையில் ஸ்ரீ மல்லாசிகாடேராயரவர்களுக்குச் சீகாழிச்சீமை முகாசு நடக்கையில் தருமபுரம் பண்டாரசந்நிதி ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அனுக்கிரகத்



தைப்பெற்ற ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் வயித்தியநாதசுவாமி கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் இரண்டாம் பிராகாரம் நாலுபுறத்து மதிலும் திருமாளிகைப்பத்தியும் அம்மன் சந்நிதி தட்டம் சுற்றி மண்டபமும் சாங்கமாகக் கருங்கல் திருப்பணியாய்க் கட்டி நிறைவேற்றி அந்தத் திருமாளிகைப்பத்தியின்மேலே நாலுபுறமும் வவ்வால் நெற்றி கட்டி நிறைவேறினது.

மேற்கில் உள்ளது :- ஸ்வஸ்தி ஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1692 கலியுக 4871 இதன் மேற்செல்லாநின்ற விகுர்தி வருஷம் வைகாசி மீ போஸலேவங்கிசத்தார்களான ஸ்ரீ துளசாமகாராசசாயபு அவர்கள் ராச்சிய பரிபாலனம் பண்ணுகிறநாளையில் ஸ்ரீ மல்லாசிகாடேராயரவர்களுக்கு சீகாழிச்சீமை முகாசு நடக்கையில் தருமபுரம் பண்டாரசந்நிதி ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அனுக்கிரகத்தைப்பெற்ற ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் தீர்த்தக்கரை நாற்சாரியும் மண்டபமும் சாங்கமாகக் கருங்கல் திருப்பணியாய்க் கட்டி நிறைவேறினது.

பெரிய கோடிக் கம்பத்தின் அடியில் தென்பக்கம் உள்ளது. சாலிவாகன சகாப்தம் 1802 கலியுகாதி 4902. இதன் மேற்செல்லாநின்ற வர்த்தமான விக்கிரம வருடம் மாசிமாதம் 23உ சுக்கிரவாரம் சதுர்த்தி அசுவதி நக்ஷத்திரம் மீன லெக்கினத்தில் தருமபுரஆதீனம் பண்டாரசந்நிதி 16-வது குருமூர்த்தமாக அவதரித்த ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருள்பெற்ற, ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அனுக்கிரகம்பெற்ற ஸ்ரீமத்

சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் கட்டளை அதிகாரம் பண்ணுகிற காலத்தில் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி வாலாம்பிகை அம்மனுக்கு விருஷபத்வஜஸ்தம்பம் கருங்கல் குறடு தங்கமூலாம் செய்து நிறைவேறியது.

## 14. அன்பர்கள்

திருஞானசம்பந்தர் :- இவர்கள் திருக்கண்ணார் கோயிலை வணங்கிக்கொண்டு, புள்ளிருக்கு வேளூருக்கு எழுந்தருளினார்கள். 'கள்ளார்ந்த பூங்கொன்றை' என்னும் சீகாமரப்பண்ணை அருளிச் செய்தார்கள். இதில், சம்பாதி சடாயு என்ற இருவரும் ஒரு யோசனைதூரம் சென்று பூக்கொணர்ந்து வழிபட்டார்கள் என்பது விளக்கப்படுகின்றது. 'தீவினைக்கோர் மருந்தாவான்' என்பதனுள் இறைவன் பெயர் குறிப்பிடப்படுகிறது.

திருநாவுக்கரசர் :- இவர்கள் தலத்திற்கு எழுந்தருளியதாக வரலாற்றுக் குறிப்பிற் காணப்படவில்லை. ஆனாலும் ஆண்டானை யடியேனை' என்னுந்தாண்டகமும் 'வெள்ளெருக்கரவம்' என்னும் திருக்குறுந்தொகையும் அடங்கன் முறையில் இடம் பெற்றுள்ளன.

அருணகிரிநாதர் :- இவர்கள் இத்தலத்தைப்பற்றிப் பாடிய பாடல்கள் பதினான்கு. "அவற்றுள் உரத்துறை போத" என்னும் பாடல் 'வயித்தியநாதப் பெருமாளே" என்று முடிகிறது. இங்ஙனம் இப்பாடலில் வயித்திய நாதா என்று இறைவன் பெயரை நினைவூட்டிய இவர்கள் "பாடகச்சிலம்போடு" என்னும் பாட்லில் "தையல்நாயகிக்கு நன்பாகர்" என்கிறார்கள். இதனால் தையல்நாயகியும் வைத்தியநாதரும் ஒருசேர நினைவூட்டப்படுகிறார்கள்.



இவை இரண்டுபாடலும் நீங்க ஏனைய பன்னிரண்டு பாடல்களும் வேளூர் என்னுந்தலப்பெயரை ஆட்சியில் உடையன. இவற்றுள் "அதிகராய்ப் பொருளிவார்" என்ற பாடலை "வேலூர் மேவிய தம்பிரானே" என்று பாடங் கொண்டு வேலூருக்குச் செலுத்துவாரும் உண்டு.

வடுகநாததேசிகர் :- இவர் காத்தியாயனரிருப்பு என்னும் ஊரிற் பிறந்தவர். வேளூர்த் தல புராணம் இவரால் இயற்றப்பெற்றதே. அது 1133 திருவிருத்தங்களையுடையது.

சிவஞானதேசிகர் :- தருமையாதீனத்தில் பத்தாவது குருமூர்த்தியாக விளங்கிய இவர்கள், அருட்பா என்னும் பெயரால் !பல சிறு தோத்திரநூல்களை யியற்றியுள்ளார்கள். அவற்றுள் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி திருவருட்பாவும் ஒன்று. இவர்கள் கவிகளிற் கனிவும் தெளிவும் இருக்கின்றன என்று சொல்லுவது மிகையாகும். அன்பு பழுத்த :உள்ளம் அருள்கனிந்த கவிதையையன்றி வேறு எதனைச்சொல்லும்.

குமரகுருபர சுவாமிகள் :- இவர்கள் 4-வது குருமூர்த்தியான ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரியரிடம் உபதேசம் பெற்றவர்கள். வடநாட்டிலும் தமிழும் சைவமும் பரவச்செய்தவர்கள். இவர்கள் இயற்றியது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்னும் கற்பனை கனிந்த நூலாகும்.

படிக்காசுத்தம்பிரான் :- தருமையாதீனத்து முனிவர்களில் ஒருவர். புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம் இவரால் செய்யப்பெற்றது. பண்பாய பகர் சந்தம் அமைந்த பல பாக்கள் விரவத் தொடுக்கப்பெற்றது.

இதில் "அடியார்கள் உய்ய உண்டை மருந்தளிக்கும் நீர் உமது மையலுக்கு மருந்தறிய வில்லையே. ஊருக்கு வைத்தியன் தன்னுடம்புக்கு விரோதி என்ற பழமொழி போல ஆயினீர்" என நகைச்சுவை தோன்றக் கூறியுள்ளனர். இன்னும் இதுபோன்ற பல சுவையுள்ள பாடல்கள் இயற்றுதலில் இவர் வல்லவர்.

சிதம்பர முனிவர் :- இவர்களியற்றிய நூல் க்ஷேத்திரக்கோவைப்பிள்ளைத்தமிழ். அதில் முத்தப்பருவத்தில் முத்துக்குமாரரைத் தோத்திரித்திருக்கின்றார்கள். "இச்செய்யுளில் முருகன் கவிசொல்லென்று ஆணையுந்தந்து அடியெடுத்துக் கொடுக்கப்பாடிய புலவர்களனைவர் பெயரும் குறிப்பிடப்பெற்றுள்ளன.

காளமேகப்புலவர் :- இவரை யறியாத தமிழ்மக்கள் இருக்கமுடியாது. விகடகவி. இவர்பாடிய தனிப்பாடல்கள்பல. அவற்றுள் இருபதுக்கு மேற்பட்ட பாடல்கள் புள்ளிருக்குவேளூரைப் பற்றியன.

இராமலிங்க சுவாமிகள் :- வடலூர் சத்தியஞான சபையை நிறுவியவர்கள். ஜீவகருணையும் • தயையுமே தம்கொள்கைகளாகக் கொண்டவர்கள். மக்களிடம் சமரசஞானம் பரவத் தக்கவழிசெய்தவர்கள். அதில் அப்போது கட்டளைவிசாரணையாக இருந்த உலகநாத முனிவர் அவர்களையும் பற்றிக் குறித்துள்ளார்கள்.

உலகநாதமுனிவர் :- பதினைந்தாவது குருமூர்த்தி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகரிடம் உபதேசம் பெற்றவர்கள். வடலூர் இராமலிங்கசுவாமிகள், இவர்களை வைத்தியநாதர் பதிகத்துப் பன்னிரண்டு பாடல்களிலும் 'தவசிகாமணி உலகநாத வள்ளல்' என்று குறிப்பிட்டுள்ளார்கள்.



முத்துக்குமாரசாமித் தம்பிரான் :- வேளூர் கட்டளை விசாரணையிலிருந்த காலத்து இவர்கள் செய்ததேவாலயப் பணிகள் பல. தேவஸ்தான வருவாய் பெருகப் பெரிதும் உழைத்தவர்கள் இவர்களே. இவர்களைப் பற்றிய கல்வெட்டுக்களும் உள்ளன.

அட்சயலிங்கத் தம்பிரான் சுவாமிகள் :- சிறந்த சாத்திர தோத்திரப்பயிற்சியாளர். "அட்டமா சித்திவல்ல அக்ஷயலிங்கசாமி" என இவர்களைப் பட்டயம் ஒன்று புகழ்கிறது. வேளூர் விசாரணையில் இவர்கள் இருந்த காலத்து, சோத்து அதிகமில்லாமையால் பூசைக்கே போதுமான வருவாய் இல்லாமலிருந்தது. பயிர் செய்யக் காளை முதலிய சாதனங்கள்கூடச் சேகரிக்க முடியவில்லை. மடத்திலிருந்த ஒருகாளையை ஒருபக்கம் பூட்டி மற்றொரு பக்கத்து நுகத் தடியைத் தம்கழுத்தில் வைத்துக் கொண்டு உழுதார்களாம். அவ்வழிச் சென்ற அரசன் மனம் கவன்று ஆவன பல செய்தான். இவர்கள்தான் வடுகநாத தேசிகரைக் கொண்டு தலபுராணம் பாடுவித்தவர்கள்.

## 15. சமயப்பணி

கிருத்திகை நக்ஷத்திர நாட்களிலும், ஏனைய விழா நாட்களிலும் ஆதீன சைவப்பிரசாரகர்களைக் கொண்டும், மற்றும் பல அறிஞர்களைக் கொண்டும் சமயச்சொற்பொழிவுகள் செய்விக்கப் பெறுகின்றன. நிரந்தரமாக நாடோறும் தமிழ்வேத பாராயணம் செய்வதற்குச் சிறந்த ஓதுவார் ஒருவரும் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கிறது. தல புராணம் அச்சியற்றப்பெற்றுள்ளது.

தேவஸ்தானச்சார்பில் வெளிவந்த நூல்கள் :— 1. கந்தர்கலிவெண்பா. 2. தலத்தேவாரம் திருப்புகழ் முதலியன. 3. தலத்தேவாரம் மட்டும் விளக்கத்துடன். 4. தலபுராணம். 5. தலவரலாற்றுச் சுருக்கம். 6. அறுபத்துமூவர். 7. துள்ளிவருகுதுவேல். (வசனம்).

## 16. திருப்பணி


"வினையற்ற கோயில் விளக்கழகு" என்பது பழமொழி. இப்பழமொழிப்படி இவ்வாலயத்தில் விளக்குகள் அதிகம். அதோடு மின்சார விளக்குகள் பல ஆலயத்தின் எல்லா இடங்களிலும் போடப்பட்டிருக்கின்றன.

தருமையாதீனத்தின் 24-ஆவது மகாசந்நிதானம் அவர்களால் 1939-ம் ஆண்டில் சுவாமி அம்மன், செல்வமுத்துக்குமாரர், அறுபத்துமூவர்களுக்கும் மருந்து சாத்திக் கும்பாபிஷேகம் நடத்தப்பேற்றது.

சுவாமிசந்நிதி தட்டஞ்சுற்றி மண்டபத்தைப் பேருஞ் செலவில் செம்மைப்படுத்தி இத் தலத்திற்குரியதான தேவாரம், பிள்ளைத்தமிழ், தனிப்பாடல், திருப்புகழ் முதலியவற்றை அழகாக எழுதச் செய்திருக்கிறது. இது இப்பொழுது சண்முக விலாசப் பிரசார சபா மண்டபமாக விளங்குகிறது. சமயப் பிரசங்கங்கள் வைத்து நடத்துவதற்கும், யாத்ரீகர்கள் வந்து தங்குவதற்கும் பேரும் உதவியாக இருக்கிறது. கோயிலுக்கே இது ஒரு அழகுதரும் நிலையில் இருக்கிறது எனலாம்.


தெற்குத் திருமதில், மேலை இராஜகோபுரத்திற்குத் தெற்குப் பகுதியிலுள்ள மேலைத் திருமதில் இவைகளைப் புதிதாக எடுத்திருக்கிறார்கள். உயரம் 22 அடி.

24A



முடி காணிக்கைச் செலுத்தும் இடம்


24B



தேவஸ்தானத்துக்குச் சொந்தமான கடைகள்



ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான் தங்க நாகாபரணம்



திருவாபரணங்கள்



TAMIL NADU ARCHIVES LIBRARY
112766

யானைகட்டு மண்டபம் ஒன்றும் கட்டப்பெற்றது. கோயில் உட்சுற்றிலும் பல இடங்களில் பெருங்கற்கள் போட்டுத் தளவரிசையிடப்பெற்றிருக்கிறது.

ஸ்ரீ நடராஜருக்கும் அங்காரகனுக்கும் மஞ்சங்கள் செய்து வைத்திருக்கின்றனர். உற்சவமூர்த்திகளுக்கெல்லாம் பீடம் அமைத்திருக்கின்றனர். அங்கு ஓர் இரும்புக் கிராதி அடைப்பும் போட்டிருக்கிறார்கள். முடியிறக்கும் கொட்டகை ஒன்று தகரத்தால் போட்டிருக்கிறது. இராமதீர்த்தத்தையும் சீகாழி செல்லும் சாலையில் உள்ள நயினார் தோப்பு என்னுமிடத்தில் உள்ள குளத்தையும் வெட்டிப் படிக்கட்டுகளும் அமைக்கப்பெற்றிருக்கின்றன. சந்தனக்குழப்பு மண்டபம் செப்பஞ்செய்திருக்கிறது. சில கடைகளும் கட்டப்பெற்றுள்ளன.

1942 ல் சித்தாமிர்தத்தீர்த்தத்தை நீரிறைத்து வண்டலள்ளித் தூய்மை செய்து, உடைந்த படிக்கட்டுகளும் செப்பஞ்செய்யப்பெற்றிருக்கின்றன. அம்மன் சந்நிதியில் உள்ள படிக்கட்டுகள் சிறியதாக இருந்ததைப் பெரிய படிகளாகப் போட்டுத் திருப்பணி செய்திருக்கின்றது. 1942 ல் விஷு தைமீ வே நீராழிமண்டபம் செப்பஞ் செய்யப்பெற்றுக் கும்பாபிடேகமும் நடத்தப்பெற்றது.

தருமையாதீனம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாட்சிக் காலத்தில் சுவாமி, அம்மன், ஆறுமுகக் குமாரர் முதலிய கடவுளர்களுக்கு அஷ்டபந்தன சுவர்ண பந்தன மகாகும்பாபிஷேகம் நடத்தப்பெற்றது.

சூரபத்மவாகனமும், விநாயகர், திருமுறை, ஜடாயு யோகசக்தி அம்மன் முதலிய மூர்த்திகளுக்குரிய மஞ்சங்களும், சுவாமி, அம்மன், சண்டிகேசுவரர் புறப்பாட்டிற்கு

923:38. 21193.P
N60

மஞ்சங்களும், சுவாமி, அம்மன், விநாயகர் புறப்பாட்டிற்கு பல்லக்குகளும் செய்யப்பெற்றுள்ளன.

இவையல்லாமல் தேவையான பித்தளைப்பாத்திரங்கள் எவர்சில்வர் பாத்திரங்கள் முதலியன வாங்கப்பெற்றுள்ளன. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதி, ஸ்ரீ ஆறுமுகர் சந்நிதிகளுக்குப் பித்தளைப்படிகள், பித்தளை அருகால் முதலியன செய்யப்பெற்றுள்ளன.

கோவில் வெளித்திருமதில் மேலராஜகோபுரம் வடக்குமுள்ளதும் வடக்கு கிழக்குத திருமதில்களும் இடிந்து போயிருந்ததைப் புதுப்பித்துக் கட்டியும் சிமிண்ட் பூசியும் வேலைசெய்யப்பட்டது. அம்மன் சந்நிதி தட்டுசுத்தி மண்டபம் தளம் பழுதாயிருந்ததை 1364 ஆம் பசலியில் பழுது பார்த்துப் பூசி வேலைசெய்யப்பட்டது. மேலும் சிறந்த ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. சந்தனக்குழம்பு மண்டபத்தில் பாதுகாப்பிற்காகவும் சௌகர்யத்துக் காகவும், நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும் இரும்புக் கிராதி அடைப்புசெய்யப்பட்டது. வடக்குத் திருமதிலில் பாதுகாப்பை முன்னிட்டு பெரிய இரும்புக் கதவு போடப் பட்டது. நவக்கிரகசந்நிதி முன்புறமுள்ள கிணற்றில் யாரும் தவறி விழுந்துவிடாமல் இருக்க சுற்றிலும் இரும்பு கிராதி அடைப்பு செய்யப்பட்டது. வாகன மண்டபம், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி, ஸ்ரீ நடராஜர், சுவாமி, அம்மன், சோமாஸ்கந்தர். உற்சவ விநாயகர், வலஞ்சுழி விநாயகர், ஸ்ரீ ஆறுமுகர், க்ஷேத்திரபுராணேசுவரர், வீரபத்திரர், ஆதி வைத்தியநாதர் ஆகிய சந்நிதிகளிலும், சுவாமி கோயில் கட்டகோபுரவாசல், கட்டளை மடம் மாடிப்படி, கட்டளை மடம் மேல்புறம் நடப்பு, நெற்களஞ்சியம் முன்புறம், சுவாமி கோயில் மேல்தளம் போகும் வழி, மாட்டுக்



கோட்டகைக்குப் போகும் வழி, ஆகிய இடங்களிலும் இரும்புக் கதவுகள் அமைக்கப்பெற்றுள்ளன.

சுவாமி சந்நிதியிலுள்ள துவாரபாலகர், டிரஷரர் ஆபீஸ், நவக்கிரக சந்நிதி, அறுபத்துமூவர் சந்நிதி, தக்ஷிணாமூர்த்தி முன்புறம், உற்சவமூர்த்திகள் சந்நிதி முன்புறம், தீர்த்தவாரி மண்டபம் முன்புறம், மாயூரம் சாலையில் உள்ள விநாயகர் கோயில், தேரடி விநாயகர் கோயில், வேம்படிமால் அருகில் உள்ள ஆபீஸ் ஆகிய இடங்களில் இரும்புக்கம்பி அடைப்பும், வாயிலில் இரும்புக்கதவுகளும் போடப்பட்டுள்ளன.

இத்தேவஸ்தான திருத்தேர்கள் மூன்றும் வெயில், மழை, தீ இவற்றால் பாதிக்கப்படாமல் இருக்க தகரக் கொட்டகைகள் போடப்பட்டிருக்கிறது. 1357 ஆம் பசலியில் அறுபத்துமூவர், பரிவாரங்கள் கும்பாபிஷேகம். 23—6—48 ஆம் நாள் அன்றும், 1359 ஆம் பசலியில் இத் தேவஸ்தானத்தைச் சேர்ந்த பிற கோயில்களான மருவத்தூர் சிவாலயம், மற்றும் கிராம தேவதைக் கோயிலான ஐயனார் கோயில் விநாயகர் முதலிய கோயில்கள் எல்லாவற்றிலும் முக்கியமாகச் செய்யவேண்டிய திருப்பணிகளைச் செய்து செய்பனிட்டு வெள்ளையடித்துக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. மருவத்தூர் கோயிலில் 4—9—49 அன்றும், மற்றக் கோயில்களில். 9—9—49 அன்றும், கும்பாபிஷேகம் 25ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானம் அவர்களால் நிகழ்த்துவிக்கப்பெற்றது.

தேவஸ்தானத்திய பண்ணை மாட்டுக்கொட்டகைகள் (கீற்றுக்கொட்டகை) பழுதாயிருந்ததைப் பிரித்துவிட்டு கர்டர்கள் நிறுத்தி டிரஸ்போட்டும் ஆஸ்பெஸ்டால்ஷீட்

போட்டும் பர்மனெண்டாக இரண்டு கொட்டகைகள் போடப்பட்டன.

பசுமாடுகள் கட்டுவதற்கென்று நிலையான கட்டிடம் கட்டி பசுமடம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது. யாக சாலை முன்புறம் சமயப் பிரசங்கங்கள் நிகழ்த்த சௌகர்ய மாயிருக்க ஆஸ்பேஸ்டால் ஷீட்டால் ஒரு நிலையான கொட்டகை போடப்பட்டுள்ளது.

சந்தனக்குழம்பு மண்டபம் ஆறுமுகர்சந்நிதி முன்புறம் ஸ்ரீ முருகப்பெருமானின் ஆற்றல்களைக் குறிக்கும் வரலாறுகள் சிறந்த ஓவியர்களால் எழுதப்பெற்றுள்ளன. பிராகாரங்களில் கருங்கல் தளவரிசை போடப்பட்டுள்ளது. மேல ராஜகோபுரம் முன்புறம் நடைபாதையில் புதிதாகக் கருங்கல் தளவரிசை போடப்பட்டிருக்கிறது. இத்தலத் தேவாரப் பதிகங்கள் மூன்றும் சலவைக் கல்லில் பொறித்து அம்மன் சந்நிதி தட்டஞ்சுற்றி மண்டபத்தில் பொருத்திவைக்கப் பட்டுள்ளது.

சேவார்த்திகள் பலரின் விருப்பப்படி ஸ்ரீ தையல்நாயகியம்மாள், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி வர்ணப் படங்கள் அச்சிட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தேவஸ்தானத்தில் புறம்பாட்டுக்குள்ள நட்டுக்கண்பார்கள் வகையரு நிறுத்திவைக்க மேலவீதியில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி ஸ்ரீ விநாயகர் தேர்முட்டிக்கருகில் ரூ. 10888-50 செலவில் ஷெட் ஒன்று போடப்பட்டிருக்கிறது. தேவஸ்தானம் கீழராஜகோபுரத்தின் முன்புறம் யாத்ரீகர்கள் வகையரு தங்க சௌகர்யமாக ஷெட் ஒன்று போடப்பட்டிருக்கிறது.



தேவஸ்தானம் அமுதுபடி வகையரு செலவுக்கு நெல் சேகரித்துவைக்க நெற்களஞ்சியம் ஒன்று கட்டப்பட்டு 3—2—59 அன்று சென்னைமாநில அறநிலையத்துறை அமைச்சர் கனம் உயர்திரு. M. பக்தவத்சலம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

கோயில் கிணறுகளிலுள்ள ஜலம் நல்ல குடிநீர். அது பலருக்கும் வசதியாகக் கிடைக்க தெற்குவீதி, கீழவீதி, மேலக்கோபுரவாசல் இவைகளில் ஆட்டோமாடிக் பம்பு செட்டுகள் வைத்து 20--8--59ல் அறநிலையத்துறை அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு உபயோகப்பட்டுவருகிறது.

குடிசைத்தொழில் அபிவிருத்தி திட்டப்படி கைக்குத்தல் அரிசி தயாரிப்பும், பள்ளிச்சிறுர்கள் 100 பேருக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 4860/- செலவில் மதிய உணவு அளிக்கும் திட்டமும் 20—8—59ல் கனம் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

நூல்நிலைய புத்தகங்கள் சரிவர வைக்க ரூ. 4694-35 செலவில் கண்ணாடிக் கதவுள்ள புக்ஷெல்பு செய்து வைக்கப்பட்டிருக்கிறது.

வடபக்கம் வெளிமதில் புதிதாக எழுப்பப்பெற்றுள்ளது. யாத்திரீகர் தங்கும் கட்டளைமடம் கட்டப்பெற்றுளது. அருளை விடுதி விடுதி கட்டப்பெற்று வருகின்றது. அருள் இறை பணிக்கென்று நடத்தப்படுகிறது. சென்னையில் இறை பணிக்கென்று ஒரு இடம் ஏற்படுத்தி பலரும் கொண்டாடும் வகையில் நடந்து வருகிறது.

திருக்குளம், நீராழிமண்டபம் பழுதுபார்த்து விமானத்தில் ரிஷபம், தீர்த்த வரலாற்றுச் சுதை உருவங்கள் அமைத்து வர்ணம் வைத்தும் சுமார் ரூ. 8000/- செலவில் திருப்பணிசெய்தும் ஸ்தூபி தங்கமுலாம் பூசியும் 13—6—60ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.


## 17. சொத்துக்கள்

இத் தேவஸ்தானத்திற்கு நன்செயில் சுமார் 6105-28 ஏக்கரும், புன்செயில் 1176-12 ஏக்கரும் இருக்கின்றன. அன்றியும் 20 வீடுகளும், கடைகளும் இருக்கின்றன. யானை ஒன்று இருக்கின்றது. இத் தேவஸ்தானத்தில் மூன்று திருத்தேர்கள் உள்ளன. வெள்ளியில் இரதம், மஞ்சம், இடபங்கள் மூன்று, இடும்பவாகனம், மயில் வாகனம், பல்லக்கு, சில எடுபிடிகள் உள்ளன.

திருவாபரணங்கள் முதலியன :- திருவாபரணங்கள் சுமார் ரூ. 1,60,750 மதிப்புள்ளவை இருக்கின்றன. 24-வது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளாட்சி ஏற்ற பின்னர் வள்ளியம்மைக்குக் கல்லிழைத்த கிரீடம் ஒன்றும், ஆறுமுக குமாரருக்கு வெள்ளிக்கவசம் ஒன்றும், ஸ்ரீ சோமாஸ்கந்தருக்கு வெள்ளிப் பார்வைத் தகடு ஒன்றும், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குச் சந்தனக்குழம்பாகும் வெள்ளி ஸ்நானவேதி ஒன்றும் செய்துவைக்கப்பெற்றன. வாலாம்பிகையம்மையாருக்கு நாற்பத்துமுக்கோணத் தாடங்கம் என்னும் திருவாபரணம் ஒன்றும் இருக்கிறது. இது ஒரு பழங்காலத் திருவாபரணம்.

மூர்த்திகளுக்கெல்லாம் வெள்ளிக் கவசம் செய்யப் பெற்றிருக்கின்றன.

30A



ஸ்ரீ தையல்நாயகியம்பாள் தங்கக்கவசம்



தங்ககவசம் சார்த்தப்பெற்ற ஸ்ரீ வள்ளி, தேவசேனை சமேத ஆறுமுகக்குமார



வாகனம் :- திருத்தேர் : ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குத் திருத்தேர் பழசாக இருந்தது. அதற்குப் பதில் ரூ. 12,160 செலவில் ஒரு தேர் செய்துவைக்கப் பட்டது. இந்தவேலை 1353ம் பசலியில் தொடங்கப் பெற்று 1355ம் பசலியில் முடிவுபெற்றது. 1355ம் பசலியில் அதற்காக ரூ. 4743—7—3 செலவாகியிருக் கிறது. வேலை பூர்த்தியானதும் 1355ம் பசலியில் வெள் ளோட்டம் விடப்பட்டு அந்த வருஷ உற்சவத்திற்கே அது பயன்படுத்தப்பட்டது.

அங்காரகனுக்கு வெள்ளி மஞ்சம்செய்து எழுந்தருளச் செய்திருக்கிறது. வாகனங்கள் புதுப்பிக்கத் தேவையிருக் கின்றன.

பல்லக்கு, ரதம் இவைகளுக்கு பட்டுத்தோம்பைகள் 16 ரூ. 1360க்கு வாங்கப்பட்டது. ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி புறப்பாட்டுக்குள்ள வெள்ளிச் சதுர்வாகனத்துக்குக் கட்ட 56'' × 56'' ஜரிகை மேக்கட்டி ஒன்று ரூ. 750/- செலவில் தயாரிக்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறது.

உத்சவம், விசேஷ காலங்களில் மண்டபங் களை அலங்கரிக்க 20' × 12' மேக்கட்டி 10 ரூ. 2200க்கும் பழுவில் கட்ட 20' × 12' மேக்கட்டி 1 இணைகள் தோம்பை 16, வாசமாலை 4, சிறிய மேக்கட்டி 1 இவைகள் ரூ. 733-81க்கும் ஆஸ்தானமண்டபத்தில் கட்ட 20'-4'' 15'-7'' மேக்கட்டி ஒன்று ரூ. 381-37க்கும் வாங்கப்பட்டு உபயோகத்தில் இருந்து வருகிறது.


32A

## தங்கப்பாத்திரங்கள் முதலியன :—


| | நிறை தோலா |
|---|---|
| சகஸ்ரதாரைத் தாம்பாளம் | 74 $\frac{1}{2}$ |
| கமலத் தாம்பாளம் | 58 $\frac{1}{8}$ |
| சுவாமிக்கு ஸ்வர்ணபந்தனம் | 24$\frac{1}{8}\frac{1}{4}$ |
| அம்மனுக்கு ஸ்வர்ணபந்தனம் | 49 $\frac{7}{8}$ |
| அபிஷேக அலங்காரம் | 95 $\frac{1}{4}$ |
| பெரிய வலம்புரிச்சங்கத்திற்கு பவுன் கட்டியது | 10 $\frac{3}{4}$ விராகனிடை 1 |
| துவஜஸ்தம்பத்துக்கு தங்கரேக்போட்டது | 197$\frac{9}{64}$ |
| ஸ்ரீ அம்பாளுக்குத் தங்கக் கிரீடம் கொண்டையுள்ளது 1 | 152$\frac{7}{16}$ |
| ஸ்ரீ வாலாம்பிகை அம்பாளுக்கு தங்கக் கவசம் | 331$\frac{15}{16}$ |
| யானைக்கு முகப்பட்டை 1 | |
| ஸ்ரீ ஆறுமுககுமாரர் ஸ்ரீ வள்ளி தெய்வானை தங்கக் கவசம் | 844$\frac{13}{32}$ |
| தங்கக் குடம் 1 | 166$\frac{11}{16}$ |
| தங்கக் குடம் 1 | 168$\frac{9}{16}$ |
| தங்கக் குடம் 1 | 168$\frac{11}{16}$ |
| ஸ்ரீ ஆறுமுககுமாரருக்கு விபூதி பட்டை கல்லிழைத்தது 1 | |

ஸ்ரீ கற்பக விநாயகருக்கு சாத்துபடி செய்ய தங்கக் கவசம் தோலா 145-4-0 எடையில் ரூ. 16962-98 செலவில் செய்யப்பட்டு சாத்துபடி செய்யப்பட்டுவருகிறது.


தங்கக் கற்பூரக்கிண்ணி ஒன்று தோலா 86-12-6 எடையில் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. தவிர வெள்ளி அருச்சனைத் தாம்பாளம் 4 செய்துவைக்கப்பட்டிருக்கிறது.




பூஜைக்குரிய தங்கக்குடங்கள்



தங்க பூஜாபாத்திரங்கள்



தங்கக் கொடிமரம்



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்குச் சந்தனக்குழம்பு அபிஷேகக் காட்சி



உபயம் வந்தவைகள் :- தேவஸ்தானம் உபயோகத்துக்கு வைத்துக்கோண்டது. 1363-ம் பசலியில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் உபயம் செய்த ஸ்ரீ முத்துக்குமாரசுவாமிக்குச் சாத்துபடி செய்ய ஆறு சரம் பவுன் குவளை கட்டிய சன்ன ருத்ராக்ஷ மாலை கல்லிழைத்த முகப்பில் 'ஓம் சரவணபவ' என பெயர் போட்டது.

1364ம் பசலியில் உபயம் வந்த 4 பட்டை சங்கிலி மூன்று. அதில் கல்லிழைத்த திருமங்கல்யம் 1-ம், கல்லிழைத்த குண்டு 2-ம் உள்ளது. அபய ஹஸ்தம் வெள்ளைக் கல்லிழைத்தது 1.

1365ம் பசலியில் உபயம் வந்த கல்லிழைத்த பவுன் திருமங்கல்யம் 1.

1365 ம் பசலியில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களால் உபயம் செய்யப்பட்ட ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி வரதஹஸ்தம் கல்லிழைத்தது 1.

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு நவரத்ன அங்கி ரூ. 1,57,320/- செலவில் செய்ய உத்தேசித்து அதற்கென தனிக்குழு நிறுவி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சேவார்த்திகள் காணிக்கை மூலம் செய்வது, இதேற்கென ரூ. 35000/- தேவஸ்தானத்திலிருந்து கோடுத்திருக்கிறது. வேலை ஆரம்பித்து நடைபேற்றுவருகிறது.

வெள்ளிப் பாத்திரங்கள் :—

| | நிறை தோலா |
|---|---|
| ஸ்தபன சோம்புகள் 10 கூஜா, உள்கிண்ணங்கள் இரண்டுள்பட 1 | 690¼ |

| | | நிறை தோலா |
|---|---|---|
| வெள்ளி விபூதிமடல் | 1 | 51$\frac{3}{8}$ |
| வெள்ளி தாம்பாளம் | 1 | 194 |
| வெள்ளி அபிஷேக கலசம் | 1 | 81$\frac{1}{2}$ |
| வெள்ளி அண்டா | 1 | 982$\frac{1}{2}$ |
| குத்துவிளக்கு 2 | | 2085$\frac{3}{4}$ |
| நைவேத்தியம் எடுக்கும் கமலபாத்திரம் | | 359$\frac{3}{8}$ |
| தளிகை எடுக்கும் தாம்பாளம் உள்ளே கிண்ணங்கள், மூடி உள்பட | | 772 [illegible] |
| அபிஷேக கலசம் | | 120$\frac{1}{4}$ |
| வெள்ளிக் குடம் 1 | | 148$\frac{3}{4}$ |
| வெள்ளி பேலா | | 13$\frac{9}{16}$ |
| வெள்ளிப்பிடிபோட்ட சௌரிமான் வெண்சாமரம் | | 66 |

ஸாட்டின்துணி போட்டு சுற்றிலும் வெள்ளியில் தங்க முலாம் கொடுத்த தொங்கல்கள் உள்ளது - மலையாளத்துக் குடை 1.

வெள்ளிக் கவசங்கள் :—

| | நிறை தோலா |
|---|---|
| ஸ்ரீ கற்பகவிநாயகர் | 458$\frac{3}{4}$ |
| ஸ்ரீ அங்காரகன் | 575$\frac{1}{8}$ |
| ஸ்ரீ துர்க்கை | 290$\frac{5}{8}$ |
| பத்ரக் குடலைகள் 6 | 227 |
| ஸ்ருக் ஸ்ருவம் | 120$\frac{3}{8}$ |
| ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு வெள்ளிக் கவசம் | 429 |
| ஸ்ரீ தண்டாயுதபாணிக்கு வெள்ளிக் கவசம் | 253 |



| | | நிறை தோலா |
|---|---|---|
| சேவகன் வெள்ளி வில்லைகள் | 5 | 14$\frac{1}{8}$ |
| வெள்ளி அண்டா | 2 | 1816$\frac{1}{2}$ |
| நகாஸ் தாம்பாளம் | 5 | 365$\frac{7}{16}$ |
| கற்பூரக் கிளை | 3 | 215$\frac{1}{16}$ |
| பூக்குடலை | 3 | 123$\frac{6}{8}$ |
| தொண்டி | 3 | 678$\frac{7}{8}$ |
| ஸ்ரீ அங்காரகன் மஞ்சம் வெள்ளிதகடுபோட்டது | | 1247$\frac{7}{16}$ |
| சுவாமி சன்னதி நந்தி கவசம் | | 257$\frac{15}{16}$ |
| சுவாமி சன்னதி கண்ணாடி | | 297$\frac{1}{4}$ |
| ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி மஞ்சம்&பார்வைத்தகடு | | 9956$\frac{1}{4}$ |
| சீதள கும்பம் குடம் 1 | | 122$\frac{7}{8}$ |
| ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி ஸ்நானவேதிகை | | 2066$\frac{7}{8}$ |
| ஸ்ரீ ஆறுமுககுமாரருக்கு வெள்ளி திருவாக்ஷி | | 224$\frac{1}{2}$ |
| ஸ்ரீ ஆறுமுககுமாரர் பார்வைத் தகடு | | 631$\frac{13}{16}$ |

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி சந்நிதி முன்புறம் வெள்ளிக் தூதவு, நிலை-அருகால் இவைகளுக்கு வெள்ளிக் கவரிங்போட்டு பார்வையாக வைக்கப்பட்டிருக்கிறது. மேற்படிக்கு வெள்ளி தோலா 5859-4-0 போடப்பட்டு ரூ. 15998-32 செலவில் மேற்படிவேலை நடந்திருக்கிறது.

அருச்சனைக்கு வில்வம், புஷ்பம் வகையரு வைத்து உபயோகப்படுத்த வெள்ளி புஷ்பக் குடலைகள் தோலா 40-7-0ல் 1, 41-3-0ல் 1, 40-10-0ல் 1 ஆக மூன்று. ரூ. 812-37 செலவில் செய்யப்பட்டது.

தேவஸ்தானத்தில் நித்தியப்படியில் உபயோகத்துக்கு பள்ளியறைப் பல்லக்கு புதிதாகச் செய்து வெள்ளி தோலா

1213-9-0 போட்டும் உள்புறம் வேல்வேட்டு தைத்தும் வேலை செய்துவைக்கப்பட்டிருக்கிறது.


## 18. நிர்வாகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் பரிபாலனத்திற்குட்பட்ட தேவஸ்தானங்களுள் இதுவும் ஒன்று. ஆதீனகர்த்தரவர்களாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீனகர்த்தா ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்த 1945ஆ ஜூன்மீ 20உ முதல் இவ் வாலயத்தையும் பரிபாலனம் செய்து வருகின்றார்கள்.


## 19. புராணங்களும் பாடல்களும்

காத்தியாயனரிருப்பு வடுகநாத தேசிகர் என்பவரால் 1133 விருத்தங்கள்கொண்ட தலபுராணம் இயற்றப் பெற்றிருக்கிறது. திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய பதிகம் ஒன்றும், திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய பதிகம் இரண்டும், அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்களும் உள்ளன. செல்வமுத்துக்குமாரர்மீது குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த பிள்ளைத்தமிழ்ப்பிரபந்தமும் தருமபுர ஆதீனம் பத்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் அருளிய பத்து ஆசிரிய விருத்தங்கள்கொண்ட திருவருட்பா என்னும் நூலும் இருக்கின்றன. க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழில் ஒரு பாடல் காணப்படுகிறது. மற்றும் காளமேகப்புலவர் முதலிய பல புலவர் பெருமக்கள் அவ்வப்போது பாடிய பல தனிப்பாடல்களும் உள்ளன. படிக்காசுத் தம்பிரான் பாடிய புள்ளிருக்குவேளூர்க் கலம்பகம் என்ற பிரபந்தம் ஒன்றும் இருக்கின்றது.







ஆதி வைத்தியநாதசுவாமி



கோயில் தோற்றம்




சுவாமி சன்னதி



அம்மன் சன்னதி



ஸ்ரீ அங்காரகன்



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி



உ

சிவமயம்

# தேவாரம்

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

அருளியது

## இரண்டாந்திருமுறை

பண்—சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர் 1
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.

தையலா ளொருபாகம் சடைமேலா ளவளோடும்
ஐயந்தேர்ந் துழல்வானோ ரந்தணனா ருறையுமிடம்
மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப் 2
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே.

வாசநலம் செய்திமையோர் நாடோறும் மலர்தூவ
ஈசனெம் பெருமானா ரினிதாக வுறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கோருநாளு மொழியாமே 3
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே.

மாகாயம் பெரியதொரு மானுரிதோ லுடையாடை
ஏகாய மிட்டுகந்த எரியாடி யுறையுமிடம்
ஆகாயம் தேரோடும் இராவணனை யமரின்கண் 4
போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே. 5

திறங்கொண்ட அடியார்மேற் றீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்ம முரைத்தபிரா னமருமிடம்
மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. 6

அத்தியினீ ருரிமூடி யழகாக அனலேந்திப்
பித்தரைப்போற் பலிதிரியும் பெருமானார் பேணுமிடம்
பத்தியினால் வழிபட்டுப் பலகாலம் தவஞ்செய்து
புத்தியொன்ற வைத்துகந்தான் புள்ளிருக்கு வேளூரே. 7

பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கு மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 8

வேதித்தார் புரமூன்றும் வெங்கணையால் வெந்தவியச்
சாதித்த வில்லாளி கண்ணாளன் சாருமிடம்
ஆதித்தன் மகனென்ன அகன்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே. 9

கடுத்துவரும் கங்கைதனைக் கமழ்சடையொன் றாடாமே
தடுத்தவரெம் பெருமானார் தாமினிதா யுறையுமிடம்
விடைத்துவரு மிலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காப்
புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே. 10

செடியாய வுடறீர்ப்பான் றீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையா மறுபிறப்பே. 11

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு நாயனார்
## அருளியது

## ஐந்தாந்திருமுறை

### திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

வெள்ளெ ருக்கர வம்விர வுஞ்சடைப்
புள்ளி ருக்குவே ளூரரன் பொற்கழல்
உள்ளி ருக்கு முணர்ச்சியில் லாதவர்
நள்ளி ருப்பர் நரகக் குழியிலே. 1

மாற்ற மொன்றறி யீர்மனை வாழ்க்கைபோய்க்
கூற்றம் வந்துமைக் கொள்வதன் முன்னமே
போற்ற வல்லீரேற் புள்ளிருக் குவேளூர்
சீற்ற மாயின தேய்ந்தறுங் காண்மினே. 2

அரும றையனை யானொடு பெண்ணனைக்
கருவி டம்மிக வுண்டவெங் கண்டனைப்
புரிவெண் ணூலனைப் புள்ளிருக் குவேளூர்
உருகி நைபவ ருள்ளங் குளிருமே. 3

தன்னு ருவையொ ருவர்க்க றிவொணா
மின்னு ருவனை மேனிவெண் ணீற்றனைப்
பொன்னு ருவனைப் புள்ளிருக் குவேளூர்
என்ன வல்லவர்க் கில்லையி டர்களே. 4

செங்கண் மால்பிர மற்கும றிவொணா
அங்கி யின்னுரு வாகிய ழல்வதோர்
பொங்க ரவனைப் புள்ளிருக் குவேளூர்
மங்கை பாகனை வாழ்த்தவ ருமின்பே 5

குற்ற மில்லியைக் கோலச்சி லையினாற்
செற்ற வர்புரஞ் செந்தழ லாக்கியைப்
புற்ற ரவனைப் புள்ளிருக் குவேளூர்
பற்ற வல்லவர் பாவம்ப றையுமே. 6

கையி னோடுகால் கட்டியு மரெலாம்
ஐயன் வீடின னென்பதன் முன்னநீர்
பொய்யி லாஅரன் புள்ளிருக் குவேளூர்
மையு லாவிய கண்டனை வாழ்த்துமே. 7

உள்ள முள்கி யுகந்து சிவனென்று
மெள்ள வுள்க வினைகெடு மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக் குவேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே. 8

அரக்க னார்தலை பத்து மழிதர
நெருக்கி மாமலர்ப் பாத நிறுவிய
பொருப்ப னாருறை புள்ளிருக் குவேளூர்
விருப்பி னாற்றொழு வார்வினை வீடுமே. 9

திருச்சிற்றம்பலம்

## ஆறாந்திருமுறை

### திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

ஆண்டானை அடியேனை யாளாக் கொண்டு
அடியோடு முடியயன்மா லறியா வண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் றன்னை
நேமிவான் படையானி னுரவோ னாகம்



கீண்டானைக் கேதார மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறிவா ளரவோடென்பு
பூண்டானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 1

சீர்த்தானைச் சிறந்தடியேன் சிந்தை யுள்ளே
திகழ்ந்தானைச் சிவன்றன்னைத் தேவ தேவைக்
கூர்த்தானைக் கொடுநெடுவேற் கூற்றந் தன்னைக்
குரைகழலாற் குமைத்துமுனி கொண்ட அச்சம்
பேர்த்தானைப் பிறப்பிலியை யிறப்பொன் றில்லாப்
பெம்மானைக் கைம்மாவி னுரிவை பேணிப்
போர்த்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 2

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவு மேத்து மிறைவன் றன்னை
யெம்மானை யென்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை அமுதத்தை ஆவின் பாலை
யண்ணிக்குந் தீங்கரும்பை அரனை யாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 3

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை யாதிமா தவத்து ளானை
யாறங்க நால்வேதத் தப்பா னின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 4

மின்னுருவை விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தி லிரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த் தாழ்புனலி னான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 5

அறையார்பொற் கழலார்ப்ப வணியார் தில்லை
யம்பலத்துள் நடமாடும் அழகன் றன்னைக்
கறையார்மூ விலைநெடுவேற் கடவுள் தன்னைக்
கடனாகைக் காரோணங் கருதி னானை
இறையானை யென்னுள்ளத் துள்ளே விள்ளா
திருந்தானை யேழ்பொழிலும் தாங்கி நின்ற
பொறையானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 6

நெருப்பனைய திருமேனி வெண்ணீற் றானை
நீங்காதென் னுள்ளத்தி னுள்ளே நின்ற
விருப்பவனை வேதியனை வேத வித்தை
வெண்காடும் வியன்துருத்தி நகரு மேவி
இருப்பவனை யிடைமருதோ டீங்கோய் நீங்கா
இறையவனை யெனையாளும் கயிலை யென்னும்
பொருப்பவனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 7

பேராயி ரம்பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமு மருந்து மாகித்



தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னை
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 8

பண்ணியனைப் பைங்கொடியாள் பாகன் தன்னைப்
படர்சடைமேற் புனல்கரந்த படிறன் தன்னை
நண்ணியனை யென்னாக்கித் தன்னா னானை
நான்மறையி னற்பொருளை நளிர்வெண் டிங்கட்
கண்ணியனைக் கடியநடை விடையோன் றேறுங்
காரணனை நாரணனைக் கமலத் தோங்கும்
புண்ணியனைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே 9

இறுத்தானை யிலங்கையர்கோன் சிரங்கள் பத்தும்
ஏழுநரம்பி னின்னிசைகேட் டின்புற் றானை
அறுத்தானை யடியார்தம் அருநோய் பாவம்
அலைகடலி லாலால முண்டு கண்டம்
கருத்தானைக் கண்ணழலாற் காம னாகம்
காய்ந்தானைக் கனன்மழுவுங் கலையு மங்கை
பொறுத்தானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே. 10

திருச்சிற்றம்பலம்



# திருப்புகழ்

## அருணகிரிநாதர்

### அருளியது

எத்தனை கோடிகோடி விட்டுட லோடியாடி
எத்தனை கோடி போன — தளவேதோ
இப்படி மோகபோக மிப்படி யாகியாகி
இப்படி யாவதேது — இனிமேல்யோ
சித்திடில் சீசிசீசி குத்திர மாயமாயை
சிக்கினி லாயுமாயும் — அடியேனைச்
சித்தினி லாடலோடு முத்தமிழ் வாணரோது
சித்திர ஞானபாதம் — அருள்வாயே
நித்தமு மோதுவார்கள் சித்தமே வீடதாக
நிர்த்தம தாடுமாறு — முகவோனே
நிட்கள ரூபர்பாதி பச்சுரு வானமுணு
நெட்டிலை சூலபாணி — அருள்பாலா
பைத்தலை நீடுமாயி ரத்தனை மூதுபீறிப்
பற்றியே சாடிவீசு — மயில்வீரா
பச்சிள பூகபாளை செய்க்கயல் தாவுவேளூர்
பற்றிய மூதர்தேவர் — பெருமாளே. 2

பாட கச்சிலம் போடு செச்சைமணி
கோவை னக்கலந் தாடு பொற்சரணர்
பாவை சித்திரம் போல்வர் பட்டுடையின் — இடைநூலார்
மார போற்றனம் கோபுரச்சிகர
மாமே னப்படர்ந் தேம லிப்பரித
பாகு நற்கரும் போடு சர்க்கரையின் — மொழிமாதர்
ஏட கக்குலம சேரு மைக்குழலோ
டாட ளிக்குலம் பாட நற்றெருவி
லேகி புட்குலம் போல பற்பலபோல் — இசைபாடி



ஏறி யிச்சகம் பேசி யெத்தியிதம்
வாரு முற்பணம் தாரு மிட்டமென
ஏணி வைத்துவந் தேற விட்டிடுவர் — செயலாமோ
சேட னுக்கசண் டாள ரக்கர்குல
மாட அட்டகுன் றேழ லைக்கடல்கள்
சேர வற்றனின் ருடயிற்காமி — ஏறுதோள்மேல்
சேணி லத்தர்போன் பூவை விட்டிருடி
யோர்கள் கட்டியம் பாட வெட்டரசர்
சேசே யோத்தசெங் தாம ரைக்கிழவி — புகழ்வேலா
நாட கப்புனங் காவ லுற்றசுக
மோக னத்திமென் தோளி சித்திரவளி
நாய கிக்கிதம் பாடி நித்தமணி — புனைவோனே
ஞான வெற்புகந் தாடு மத்தர்தையல்
நாய கிக்குநன் பாக ரக்கணியும்
நாதர் மெச்சவந் தாடு முத்தமருள் — பெருமாளே. 3

மாலினாலெ டுத்தகந்தல் சோறினால்வ லர்த்தபோந்தி
மாறியாடெ டுத்தசிந்தை — அரியாய
மாயையாலெ டுத்துமங்கி னேனையாவெ னக்கிரங்கி
வாரையாயி னிப்பிறந்து — இறவாமல்
வேலினால்வி னைக்கணங்கள் தூளதாவெ ரித்துமுன்றன்
வீடுதா பரித்த அன்பர் — காணமூடே
மேவியானு னைப்போல் சிந்தை யாகவேக ளித்துகந்த
வேளையாமெ னப்பரிந்து — அருள்வாயே
காலினாலெ னப்பரந்த சூர்மாள வெற்றிகொண்ட
காலபானு சத்தியங்கை — முருகோனே
காமபாண மட்டனந்த கோடிமா தரைப்புணர்ந்த
காளையேறு கர்த்தனெந்தை — அருள்பாலா
சேலைநேர்வி ழிக்குறப்பெ ணாசைதோளு றப்புணர்ந்து
சீரையோது பத்தரன்பில் — உறைவோனே
தேவர்மாதர் சித்தர்தொண்டர் ஏகவேளு ருக்குகந்த
சேவல்கேது சுற்றுகந்த — பெருமாளே. 4

மூலா தாரமோ டேற்றி யங்கியை
ஆரு தாரமோ டோட்டி யந்திர
மூலா வாயுவை யேற்றி நன்சுழி — முனையூடே
மூதா தாரம ரூப்பி லந்தர
நாதா கீதம தார்த்தி டும்பர
மூடே பாலொளி யாத்து மந்தனை — விலகாமல்
மாலாடு னொடு சேர்த்தி தம்பெற
நானா வாகம சாத்தி ரஞ்சொலும்
வாழ்ஞா னபுரி யேற்றி மந்திர — தவிசூடே
மாதா நாதனும் வீற்றி ருந்திடும்
வீடே மூன்றொளி காட்டி சந்திர
வாகார் தேனமுதூட்டி யென்றனை — உடனுள்வாய்
சூலாள் மாதுமை சேர்த்த சம்பவி
மாதா ராபகல் காத்த மைந்தனை
சூடோ டீர்வினை லாட்டிமைந்தரின் — எமையாளும்
தூயாள் மூவரைநாட்டு மேந்தையர்
வேளூர் வாழ்வினை தீர்த்த சங்கரர்
தோய்சா ரூபரோ டேற்றி ருந்தவன் — அருள்பாலா
வேலா வேழ்கடல் வீட்டி வஞ்சக
மூடர் சூரரை வாட்டி யந்தகன்
வீடு டேவிய காத்தி ரம்பர் — மயில்வாழ்வே
வேதா நால்தலை சீக்கோ ளும்படி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா மால்மக ளார்க்கி ரங்கிய — பெருமானே. 5

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி திருவருட்பா

தருமை ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள்

அருளியது

மதிவதன மாடவிரு காதில்நவ ரத்நமணி
மகரகுண் டலமாடநாண்
மலர்ப்புண்ட ரீகவிழி யாடவரு ளாடமன
மகிழ்மந்த காசமாடக்
கதிருதய மாயிரங் கோடியென வேயிலகு
காருண்ய மேனியாடக்
கனவச்ர புயவலய மாடவண் டாடக்
கடப்பமலர் மாலையாட
விதமணி யிழைத்தபரி புரமாடு சரணார
விந்தங்க ளாடநீள்கை
வெற்றிவே லாடமயி லாடவென் கண்முன்நீ
விளையாட வோடிவருவாய்
முதுமறைக ளாகம முழங்குபுள் ளூரனே
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்க்கு ருவேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே.

பொன்னெடுங் குன்றே யனந்தசந் தரோதயம்
போலவரு ஞானவொளியே
பொய்யிருளை நீக்கியிடு மெய்யிரவி யுதயமே
பூரணா னந்தசுகமே
அன்னையினு மன்புமிகு மன்புருவ மேயிருவர்
அறிவரிய வோரு பிரமமே
அருமருந் தேயமுத சலதியே யடியார்
அறிந்தகரு வூலமேயென்(று)

உன்னையே பாடிநின் றுடியிரு கண்ணில்நீ
ரோடரோ மஞ்சிலிர்ப்ப
உள்ளங் கரைந்துருக வடியனே னனந்த
வுல்லாச மாவதென்றோ
முன்னைவினை தீர்த்தருளு மன்னனே புள்ளூரின்
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே. ௨

அடியருள மண்டபமு மையர்செஞ் சடிலமும்
அன்னை யர்க ளிருவர்வயிறும்
அம்புயா சனன்விழியு மிந்திரா தீபர்தலையும்
அருமறை யனந்தமுகமும்
படியுண்ட மால்புயமு நெடியமயி லின்முதுகும்
பரங்குன்று பழனிசெந்தூர்
பலதலமு மெந்நேரம் விளையாடு முனதுபய
பரிபுர பதாம்புயங்கள்
குடிகொண்ட வஞ்சகம் பொய்கபட நாடகங்
கோலைகளவு காமமெல்லாங்
கொள்ளைகொளு மென்னுடைய கள்ளவித யத்திலே
கூசாம லென்றுவருமோ
முடியினு லமரர்கள் வணங்குபுள் ளூரனே
முக்கட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே, ௩

அன்னைசொற் கொருசெவி யையர்சொற் கொருசெவி
யம்மான் றுதிக்கொருசெவி
யானைசொற் கொருசெவி வீரர்சொற் கொருசெவி
அயன்றுதிக் கொருசெவிவிண்ணோர்
மன்னர்சொற் கொருசெவி வள்ளிசொற் கொருசெவி
வான்வனிதை சொற்கொருசெவி



மறைதுதிக் கொருசெவி யடியர்சொற் கொருசெவி
வல்லசுரர் சொற்கொருசெவி
பன்னிரண் டுங்கொடுத் தென்சொல்கே ளாமற்
பாராமுகம தாயிருந்தாற்
பாவியேன் மெலிவுகுறை யெவர்செவியி லேற்றிப்
படுந்துயர் களைந்துகொள்வேன்
முன்னமறை நாலும்வந் துன்னுபுள் ளூரனே
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே. 4

உன்புவன மென்புவன முன்வடிவ மென்வடிவம்
உன்பொறிக ளெனதுபொறிகள்
உன்கரண மென்கரண முன்மொழிக ளென்மொழிக
ளுன்விடய மென்விடயமென்
றன்பினுட னின்றெனையு னன்பர்பெறு மின்பவடி
வாகவரு ளேகமுதலே
அண்டருறை யண்டநவ கண்டமுமு வந்தருளும்
அம்பிகைத்ரி யம்பகிருங்
தின்பவமு தேவருக வெங்கள்மக னேவருக
வெங்களுயி ரேவருகவிங்
கெங்கள் தன மேவருக வெங்களர சேவருக
வெங்கண்மணி வருகவெனவே
முன்புவந் தவருடன் விளையாடு புள்ளூர
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே. 5

சந்த்ரனீ தென்னவும் பெற்றதா யென்னவுந்
தயையொடு குளிர்ந்தமுகமுந்
தழைந்ததிரு அருண்மழை பொழிந்துமல வெப்பந்
தணிக்குங்க்ரு பைப்பார்வையும்

அந்தமில் லாச்சச்சி தானந்த மாம்வடிவும்
அழகோழுகு புன்சிரிப்பும்
அத்தந் தரித்திடுசின் முத்திரையு நின்றில(கு)
அருட்குரவ னாகியிங்கே
வந்திருந் துன்னடியை யேன்முடியில் வைத்துலக
வாதனை யேலாமிறக்க
மாளாத பேரின்ப வாரியினிலாழவருள்
வாலாம்பி கைக்குமகனே
முந்திரா மன்பணிய வந்துபுள்ளூரில்வாழ்
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே. 6

அருவங்க ளாலன்றி யுருவங்க ளாலன்றி
யருவுருவ மானதன்றி
யண்டபகி ரண்டநவ கண்டங்க ளன்றிமே
லழியாத காரணமன்றி
உருவங்க ளன்றியாங் குளபோக மன்றியுயிர்
தங்குமுட லங்களன்றி
உளதன்றி யிலதன்றி யுட்புறம் பன்றிமே
லுண்டாகி யழிவதன்றி
நிருமல நிராதார நிர்க்குண சிதாகாச
நித்யசக சானந்தமா
நின்சரணை யோநினைவ தல்லாம லேன்மனம்
நினைக்குமோரு பொருள்வேறிலை
முருகுவிரி சோலைமலர் பெருகுபுள் ளூரில்வாழ்
முக்கட் குருக்கள்குருவே
முத்தகுரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே. 7



உருவங்க ளாலுநீ யருவங் களாலுநீ
யுபயமோன் றானதுவுநீ
உலகங்க ளெங்கும்வரு கரணங்கள் யாவுநீ
யுருவங்க ளெல்லாமுநீ
வருபெரிய போகங்கள் யாவுநீ மண்ணுநீ
வாரிமுதலோண் புனலுநீ
வடவைமுத லனலுநீ வாயுநீ வானுநீ.
மதியுநீ மார்த்தாண்டனீ
அருவங்க ளாமுயிர்கள் யாவுநீ யின்பதுன்ப
மாவதுவு நீயேன்பதை
அடியனேந் நேரமுங் கண்டுகண்டுல்லாச
ஆனந்த மாவதென்றோ
முருகசர வணபவா பெரியபுள் ளூரனே
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே.

பாகம்வரு நிமிடத்தி லகிலசக மெல்லாம்
படைத்துத் திதித்தழித்துப்
பரமசக சானந்த சலதிவிளை யாடவீடு
பரமசிவ மாமுன்னைநான்
ஏகதே சத்திலய னைப்புடைத் துப்படைத்
தேதிர்சூர பத்மனைக்கோன்
றிந்த்ராதி யோரைரட் சித்திருந் தாயேன்
றியம்புவது பெரியபுகழோ
மாகமுறை தேவர்க்கு மனிதர்க்கு முனிவர்க்கு
மண்ணுண்டை யால்நீற்றினால்
வறுமையோடு தேகத்தில் வருபிணிக ளெல்லாமு
மரணசன னங்களாகு

மோகநோ யுந்தவிர வருளுதவு புள்ளூர
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே. ௯

எள்ளளவி லாயிரத் தோன்றளவு பத்தியுன்
இணையடியில் வைத்தபேர்கட்
கிந்த்ராதி பதமுமுயர் சந்த்ரசூ ரியர்பதமும்
இமையவர்க ளரியபதமும்
தெள்ளுபுகழ் நான்முகக் கடவுள்பத மும்நெடிய
செங்கண்மால் பதமும்எல்லாச்
செல்வமும் வருமென்று சொல்லவுங் கேட்டுமுன்
திருவடிக் கன்பிலாத
கள்ளமா னிடரையொரு காசும்பெ றுதசீக்
கந்தையென் றேவிட்டுநான்
கற்றமெய் யடியவர்கள் குற்றேவல் செய்யக்
கடாட்சம்வைத் தருள்வேலவா
முள்ளுடைய தாள்முளரி கள்ளுதவு புள்ளூர
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே. 10

திருச்சிற்றம்பலம்



# முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

## குமரகுருபர சுவாமிகள்

## இயற்றியது

துறைபட்ட மறையவன் செங்நாப் படிந்துதன்
சுவைநிறஞ் சிதைவுறுமே
தொன்மறை கனிந்தூறு மண்பனி ருறலின்
தூத்துகில் நனைப்புறுமே
நறைபட்ட வெண்டோட்டு கனிப் போகுட்டமது
நன்னெஞ் செனக்குடிபுகும்
ஞானப் பிராட்டியைச் சொற்கடற் றெள்ளமுதை
நாத்தழும் பத்துதிப்பாம்
சிறைபட்ட தண்டுறைச் சித்தாமிர் தப்பெருந்
தீர்த்தம் திளைத்தாடிய
செஞ்சுடர்க் கடவுளும் வெண்சுடர்க் கடவுளிற்
றெள்ளமுத மயமாகலான்
உறைபட்ட சுதைநிலவொ டிளவெயிலு மளவளாய்
உண்ணச் சகோரம்வெஃகும்
ஓங்கெயிற் பருதிபுரி முருகனைச் சண்முகத்
தொருவனைக் காக்கவென்றே.

மீனேறு குண்டகழி தீவாய் மடுத்ததனி
வில்லியா ரிளவலோடும்
விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை
வெள்ளமென வீற்றிருக்கும்
ஆனே றுயர்த்திட்ட ஐயற்கும் அம்மைக்கும்
அருமருந் தாகிநின்ற
ஆதிப் பிரானென்று மும்முதற் கடவுளும்
அடித்தொழும் பாற்றமற்றக்

கூனேறு மதிநுதற் றெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந் தவள்தோண் டைவாய்த்
தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள
செங்கீரை யாடியருளே.


மழவுமுதிர் கனிவாய்ப் பசுந்தேறல் வெண்துகில்
மடித்தல நனைப்ப அம்மை
மணிவயிறு குளிரத் தவழ்ந்தேறி யெம்பிரான்
மார்பினிற் குரவையாடி
முழவுமுதிர் துடியினிற் சிறுபறை முழக்கிஅனல்
மோலிநீர் பெய்தவித்து
முளைமதியை நெளியரவின் வாய்மடுத் திளமானின்
முதுபசிக் கறுகருத்தி
விழவுமுதிர் செம்மேனி வெண்ணீறு தூளெழ
மிகப்புழுதி யாட்டயர்ந்து
விரிசடைக் காட்டினின் றிருவிழிகள் சேப்பமுழு
வெள்ளநீர்த் துளையமாடிக்
குழவுமுதிர் செவ்விப் பெருங்களி வரச்சிறு
குறும்புசெய் தவன்வருகவே
குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட
குமரகுரு பரன்வருகவே.

திருமன்னு பொன்னுலகு மண்ணுலகு மோக்கத்
தலைத்தலை மயங்கத்தோகும்
சன்னிதி யடைந்தவர்கள் பையுளெய் முற்றும்
தவிர்ந்தக மகிழ்ந்துதவிராக்



கருமன்னு முழீப் பெரும்பிணியு மாற்றிடுதல்
கண்டனை யிருத்தியால்நின்
கயரோக முடன்முயற் கறையும் துடைத்திடக்
கருதிடுதி யேலெம்பிரான்
திருமுன்ன ரள்ளியிடு வெண்சாந்து மற்றைத்
திருச்சாந்து நிற்கவற்றுச்
சித்தாமிர் தத்தடத் தீர்த்தத் துறைக்குறுந்
திவலையோன் றேயமையுமால்
அருவென்ன வுருவென்ன அன்றென்ன நின்றவனோ
டம்புலீ யாடவாவே
அழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுடன்
அம்புலீ யாடவாவே.

திருச்சிற்றம்பலம்



துவாரபாலகர்கள்

# க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

சிதம்பரநாதமுனிவர்

அருளியது

சேவிகளோரு பன்னிரண் டுங்கேட்க: அயனையுந்
தேவர்பணி யுங்குருவையும்
தேவர்கோ னென்றசத மகனையும் செந்தமிழ்சொல்
தேன்போதிய மலைமுனியையும்
புவியினக் கீரரையும் ஔவையையு நீமுன்
புகழ்ந்தபோய் யாமொழியையும்
புகழ்கொண்ட அருணகிரி நாதரையும்: வெகுசித்தர்
போற்றுகரு வூராரையும்
குவியுமன மருச்சிறு புலவரையும் வருபுலவர்
கொண்டாடு நல்லபகழிக்
கூத்தரையும் வளர்காசி வாழுஞ் சிவானந்த
குமரகுரு பரமுனியையுங்
கவிசொலென் றேயடி யெடுத்துக்கொ டுத்தவன்
கனிவாயின் முத்தமருளே
கந்தனே புள்ளூரில் வந்தமுத் துக்குமர
கனிவாயின் முத்தமருளே.

திருச்சிற்றம்பலம்

112766

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"


அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திலிருந்து வெளிவருவது. சமய உண்மைப்பொருள் முதலியவற்றைக் குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந் துணையாவது. கையொப்பத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 1—50. வெளிநாடு ரூ. 2—00

செயலாளர்,

"ஞானசம்பந்தம்" காரியாலயம்,

தருமையாதீனம், மாயூரம் அஞ்சல்.

தஞ்சை மாவட்டம்.



ஞானசம்பந்தம் அச்சகம், தருமபுரம்.